# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 29 (12-04-1998) ஞாயிற்றுக்கிழமை UTHAYAN–A Lively National Tamil Daily கதிர்:116



பொது சன நூலகம் [15 APR 1998] மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்


# இலங்கைபிரச்சினைக்குதீர்வுகாண இந்தியா முயற்சி எடுக்க வேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை

சென்னை, ஏப்ரல் 12

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்திய மத்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மத்தியில் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சியும் இடம் பெற்றிருப்பதும் —

பாட்டாளி மக்கள் கட்சியைச்சேர்ந்த ஒருவர் இணை அமைச்சராக இருப்பதும் தெரிந்தவையே.

அமைச்சரவை விஸ்தரிக்கப்படும் போது பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மற்றும் ஒருவருக்கும் பதவி கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள ஈழத் தமிழர்களை தமது கட்சி

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவர்கள் இலங்கை வருகின்றனர்!

கொழும்பு, ஏப். 12

ஐ. நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி பில் றிச்சேர்ட்சன் தென்கிழக்கு ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க வெளிவிவகார உதவிச் செயலர் கார்ள் பிரெடெறிக் இண்டர்போர்த் ஆகியோர் இம் மாதம் 18ஆம் திகதி இலங்கை வருகின்றனர்.

பில் றிச்சேர்ட்சன் பல வருடங்களின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஆவார்.

இவர் தமது இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் மற்றும் அரசியல் தலைவர்களையும் சந்திக்க ஏற்பாடாகி உள்ளது.

ஏப்பிரல் 18 ஆம் திகதி கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலும் றிச்சேர்ட்சன் கலந்து கொள்வார்.

அதே சமயம் பிரெடெறிக் இண்டர் போர்த் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் விசேட பிரதிநிதியாகச் செயற்படுவதுடன் 2010 ஆம் ஆண்டளவில் உலகில் கண்ணி வெடிகள் மற்றும் மிதிவெடிகளை இல்லாமல் செய்யும் ஜனாதிபதி பில் கிளின்ரனின் திட்டத்தை மேற்பார்வை செய்யும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். (இ)

## பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 12

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நாளை திங்கட்கிழமை பயணிகள் கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இக் கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களை நாளை காலை 8.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## இலங்கை மீனவர் தமிழ்நாட்டின் கரை சேர்ந்தனர்

மணிலா, ஏப். 12

கடற்றொழிலில் ஈடுபடும் போது படகு பழுதடைந்ததால் கரைசேர முடியாது தவித்த 4 இலங்கை மீனவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துன்பங்கள் விலகி அமைதி ஏற்பட வாழ்த்துகின்றோம்

### ஆயர் ஈஸ்டர் செய்தி

யாழ்ப்பாணம், ஏப். 12

தமிழ்மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் விலகி நிரந்தர சமாதானம் ஏற்பட வாழ்த்துகின்றோம்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தனது உயிர்ப்பு ஞாயிறு செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவை உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவ மக்கள் இன்று கொண்டாடுகின்றனர்.

இயேசு தம் சிலுவைப்பாடுகளையும், மரணத்தையும் வென்று வெற்றி வீரனாக உயிர்த்தது உலகம் காணாத மாபெரும் நிகழ்வாகும்.

இயேசுவின் பாடுகள் மரணம் மீதான வெற்றி எமது பாடுகள் மரணத்துக்கும் ஒரு வெற்றி உண்டு என்ற நம்பிக்கையைத் தருகிறது.

தமிழ் மக்களும் தமது புது வருடத்தைக் கொண்டாடும் இந்த இரட்டிப்பான மகிழ்ச்சியின் நேரத்தில் தமிழ் மக்கள் எல்லோரதும் துன்பங்கள் விலகிக் கொடிய போர் முடிந்து, நீதியான, நிரந்தரமான தீர்வு பேச்சு வார்த்தை மூலம் கிடைக்க வாழ்த்துகின்றோம். உயிர்ப்பின் இயேசுவை வேண்டுகின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வந்தாறுமூலையில் குண்டு வெடித்து ஒருவர் காயம்

மட்டக்களப்பு, ஏப். 12

மட்டக்களப்பு – வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்று நண்பகல் இடம் பெற்ற குண்டு வெடிப் புச்சம்பவம் ஒன்றில் பொதுமகனொருவர் காயமடைந்தார்.

வீதியோரம் குவிக்கப்பட்டிருந்த குப்பைக்குள் இக்குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

நடராசா செல்வநாயகம் என்பவரே காயமடைந்தவர் ஆவார்,

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார், (இ-21)

## துறைமுகப் பாதுகாப்பு வலயத்துக்குள் வள்ளத்தில் சென்ற 60 பேர் கைது!

கொழும்பு, ஏப். 12

கொழும்புத்துறைமுக கடலோரப் பாதுகாப்பு வலயத்துக்குள் மீன்பிடி வள்ளத்தில் பிரவேசித்ததாகக் கூறப்படும் 60 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் உண்மையிலேயே மீனவர்கள் தானா? என்பதை அறிய கொழும்புத்துறைமுக பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தாக்குதல் இலக்குகளில் கொழும்புத்துறைமுகமும் ஒன்றாகக் கருதப்பட்டதனாலேயே துறைமுகப்பகுதிக்குள் வள்ளங்கள், கப்பல்கள் செல்வதற்கு கடற்படையினரின் அனுமதியைப்பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுப்பாட்டையும் மீறி துறைமுகப் பாதுகாப்பு வலயத்துக்குள் பிரவேசித்த 60 பேரும் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## பேசாலைக் கடல் பகுதியில் படையினரிடம்சிக்கியபடகு

### அதில்இருந்தவர்கள்தப்பினர்

கொழும்பு, ஏப். 12

மன்னார் பேசாலைக் கடலில் நேற்று முன்தினம் இரவு மீன்பிடிப் படகு ஒன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கடற்படையினரின் நடமாட்டத்தைக் கண்டு படகில் பயணம் செய்தவர்கள் கடலில் குதித்துத் தப்பிவிட்டார்கள் என்றும் —

சிமெந்து பைக்கெட்— 10, டீஸல்— 400 கலன், யமஹா மோட்டார் சைக்கிள் — 1 என்பன படகில் இருந்து மீட்கப்பட்டதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

## புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள பொலீஸ் பிரிவுக்கு விசேட பயிற்சி

### எப்பொழுதும் தயார் நிலையில் இருக்குமாம்

அவசர பொலீஸ் பிரிவில் பணியாற்றும் 70 பொலீஸாருக்கு யுத்த ஆயுதங்களைக் கையாளும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிரிசேன ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த 70 பொலீஸாரும் கொழும்பிலுள்ள அவசர பொலீஸ் பிரிவில் தொலைத்தொடர்புகளுடன் கூடிய வாகனங்களில் நடமாடுவர்.

இந்தப் பொலீஸார் புலிகளின் தாக்குதல் இடம் பெறும் இடங்களுக்கும் பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையே மோதல் ஏற்படும் இடங்களுக்கும் சென்று அத்தாக்குதல்களை அடக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கிருலப்பனையிலுள்ள இராணுவ பயிற்சி நிலையத்தில் இந்தப் பொலீஸாருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் இந்தப் பொலீஸ் அவசரப் பிரிவு எப்போதும் தயார் நிலையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## மா, எரிபொருள்களின் விலை குறைக்க கோரிக்கை

மாவினதும் எரிபொருள்களினதும் விலைகளைக் குறைக்குமாறு அரசாங்கக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசைக் கேட்டுள்ளனர்.

உலக சந்தையில் மாவினதும் எரிபொருளினதும் விலைகள் குறைந்துள்ளன. எனவே இங்கும் அதன் விலைகளைக் குறைக்க வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளார்கள்.

1994 ஆம் ஆண்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தபோது ஒரு பரல் எரிபொருளின் விலை 16 டொலர் ஆகும். பின்னர் அது 22 டொலராக அதிகரித்தது. ஆனால் தற்போது அதன் விலை 13 டொலராகக் குறைந்துள்ளது.

அதேபோல் அப்போது ஒரு மெற்றிக்தொன் மாவின் விலை உலக சந்தையில் 155 டொலராக இருந்தது. பின்னர் அது 220 டொலராக உயர்வடைந்தது. ஆனால் தற்போது 137 டொலராகக் குறைந்துள்ளது. எனவே உலக சந்தையில் விலையின் அடிப்படையில் மாவினதும் எரிபொருள்களினதும் விலைகளைக் குறைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர். (இ-10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் சுற்றாடலில் சில பெறுமதிமிக்க பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன உரியவர்கள் ஆதாரத்துடன் கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் இந்து இளைஞர் மன்றம்,
பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்,
மட்டுவில்.

[சி/3431]

## கண்ணீர் அஞ்சலி

அமரர் **சுப்பிரமணிய தேசிகர் பாலசுப்பிரமணிய தேசிகர்**

(ஆரம்பகால உறுப்பினர்,
அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை)

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அகில இலங்கை சைவக்குருமார்
அர்ச்சகர் சபை.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (சி/3433)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**நாகமுத்து சிதம்பரம்**
(மட்டுவில் வடக்கு)

எமது கழகத்தின் நீண்ட கால உறுப்பினரும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பணிபுரிபவருமான

**செல்வி சி. செல்லம்மா**

அவர்களின் அன்புத் தாயாரின் மறைவு குறித்து அவரின் குடும்பத்தினரின் துயரத்தில் பங்குகொள்வதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

கல்வித் திணைக்கள நலன்புரிக் கழகம்,
வலயம் I - யாழ்ப்பாணம்.

(54873)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவன்
ப. சிவசங்கர்
அவர்களின் அருமைத் தம்பி

**செல்வன் பசுபதி சிவவாசன்**

(பொறியியல்பீட மாணவன், பேராதனை)

அகாலமரணமானதையிட்டு அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

சேகர் சவுண்ட் அன் மியூசிக்கல்ஸ்
இல. 6, கடுக்காயடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[54867]

## மாடுகளால் பாதிப்பு

இளவாலை, ஏப். 12

இளவாலை மேற்கு அம்பிளியவத்தையைச் சேர்ந்த ஒருவருடைய தோட்டத்தில் 800 மிளகாய்க் கன்றுகளும், 20 ஆயிரம் பயிற்றம் கொடிகளும் மாடுகளினால் அழிக்கப்பட்டுள்ளன.


நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
12 - 04 - 98 முதல்
பிரபுதேவா - காஜோல்
அரவிந்தசாமி
நடித்த
மின்சாரக் கனவு
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/3428)

**ஸ்ரீ செல்வா திரையரங்கு**
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
ரசிகர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!
12-4-98 13-4-98
தினங்களில்
10–30, 2–30 மணிக்கு
(பழைய நேரம்)
ரஜனி- சத்தியராஜ்
நடிக்கும்
Mr. பாரத்
14-4-98 புதுவருடத்தை
முன்னிட்டு
பாக்கியராஜ் - நக்மா
நடிக்கும்
வேட்டியை
மடிச்சுக்கட்டு
(54866)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
12-04-98, 13-04-98
ராஜ்கிரண்- குஷ்பூ
வடிவேலு நடித்த
பொன்னு
விளையிற பூமி
அடுத்த வெளியீடு!
முரளி - ராஜ்கிரண்
குஷ்பூ - லட்சுமி நடித்த
வீரத் தாலாட்டு
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223
(54347)


## மறுமலர்ச்சி ஏந்திவந்த மனுமகனே போற்றி!

| | | | |
|---|---|---|---|
| மறுமலர்ச்சி<br>அருள் வளர்ச்சி | ஏந்திவந்த<br>ஈந்தருளும் | மனுமகனே!<br>ஆண்டவனே! | போற்றி<br>போற்றி |
| உயிரோடு<br>உயிர்த்தெழுந்த | உறவாடும்<br>உம்நாமம் | உன்னதனே!<br>உலகெங்கும் | போற்றி<br>போற்றி |
| புரட்சித்<br>உயர்ச்சிப் | தலைவனே!<br>படிகளில் | புண்ணிய<br>உளமாற்றம் | வேந்தனே!<br>தாருமையா! |
| வெற்றிச்<br>பற்றிய | சின்னமாம்<br>கரத்திலே | விடுதலைக்<br>பாவியர் | கருவியைப்<br>சரணமையா. |
| ஐம்புலன்<br>ஐந்து | அடக்கி<br>காயத்திலே | அறிவுகள்<br>அர்ப்பண | திருத்த<br>மாகினோம். |
| புதுப்புது<br>புத்தொளி | வரங்களில்<br>ஆவியை | பூத்துக்<br>எம்மீது | குலுங்கும்<br>பொழிந்திடும்! |
| அநீதிக்கு<br>சமநீதி | இரையாகி<br>வழங்கிடும் | அழிகின்றோம்<br>சமாதான | ஐயனே!<br>சற்குருவே! |
| அழுகுரலும்<br>கழுமரத்தில் | தொழுகுரலும்<br>பலியான | ஆறாத<br>உமமுயிர்ப்பில் | கூக்குரலும்<br>களிகூரும். |
| நல்நோக்கு<br>நல்லொளியே! | நல்முயற்சி<br>எந்நாளும் | நல்லுறவில்<br>இணைந்திருப்பீர் | நாம்துலங்க<br>எம்முடனே! |
| வாய்நிறை<br>தோயும் | புகழால்<br>அன்பினால் | வாழ்த்துப்<br>தோத்திரம் | பாடினோம்<br>கூறினோம்! |

மிருசுவில்.

(54864)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியதேசிகர் பாலசுப்பிரமணியதேசிகர்

(கோப்பாய் தெற்கு, கற்பக விநாயகர்,
மீசாலை திருநாவுக்கரசு மடாலய ஆதீனகர்த்தா)

இருபாலையைச் சேர்ந்த சுப்பிரமணியதேசிகர் பறுவதம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியதேசிகர் தம்பதிகளின் அன்பு மருகருமாகிய பாலசுப்பிரமணிய தேசிகர் 11-04-98 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாவல்லியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வச்செந்தில், செல்வசேனககுருக்கள் (அமுதாஐயா), செல்வவேந்தன் (பாபுஜிஐயா)ஆகியோரின் அன்புத்தந்தையும்,திருமதி சிவஞானம்மா இரத்தினசபாபதிக்குருக்கள், காலஞ்சென்ற திருமதி மனோன்மணி நடராசா, செல்வி வீணாகானவிபூசனிஅம்மா, சு. சிவசுப்பிரமணியதேசிகர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பவானியின் அன்பு மாமனாரும், கவிதா (பிரியங்கா) வின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (12-04-98) பகல் 1.00 மணியளவில் அவரது இருபாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா.அமுதா ஐயா
(மகன்)

கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்,
இருபாலை, கோப்பாய். (சி-3432)

### வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது மருதனார்மடத்தில் வசித்து வந்தவருமான வைத்திலிங்கம் சுப்பிரமணியம் 11-4-98 இல் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் வைத்திலிங்கம் விசாலாட்சிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும், செல்வி சத்தியேஸ்வரி, சுப்பிரமணியம் (யா/ காங்கேசன்துறை மகாவித்தியாலயம், வீமன்காமம் மகாவித்தியாலயம்), திருமதி சி. ஜெகதீஸ்வரி, சு. இரவீந்திரக்குமாரன் (உணவுக் களஞ்சியம், புனர்வாழ்வுப் பகுதி), சு. கணேந்திரக்குமாரன் (சிமெந்துத் தொழிற்சாலை), சு. சிவகுமாரன் (U. C., வவுனியா), திருமதி சு. அனுசியாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு.சி.சிவமயம் (மக்கள் வங்கி), திரு . சி. சுந்தரராசா (உப்பளம், ஆனையிறவு), திருமதி சி. லதா, திருமதி க. பாமா (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், துர்க்காதரன்,றமணன், ராகுலன், லோஜினி, அபிராமி, உமா, சுகந்தன், ஜெயராமி, சங்கீர்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி சின்னத்துரை, சிவபாக்கியம், திரு. ஈஸ்வரம்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-4-98) ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மருதனார்மடம் பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சு இரவீந்திரக்குமாரன்
(மகன்)

கா.சோமசுந்தரம்
,திலை, இராமநாதன் வீதி,
டுவில் கிழக்கு,
ன்னாகம். (54871)

### தம்பையா தம்பிமுத்து

மட்டுவில் தெற்கு வாகையடி வீதியைச் சேர்ந்த தம்பையா தம்பிமுத்து 11- 04- 98 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், பரமேஸ்வரி, மகேஸ்வரி, ஈஸ்வரி, புவனேஸ்வரி, சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), கணேசலிங்கம், நாகேஸ்வரி (ஜேர்மனி), கமலகுமாரி (ஜேர்மனி), இந்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், குணசேகரம், சந்திரமௌலீசன் (மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), சண்முகலிங்கம், வரதலிங்கம் (ஜேர்மனி), பரமேஸ்வரி (பிரான்ஸ்), செல்வமலர், குகராஜன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவானி, வசந்தி (சுவிஸ்), அனுசியா, குமுதினி, பிருந்தா, பாலகிருஷ்ணன், நிலாசினி, முரளீதரன் (கனடா), தேவபாலன் (கொழும்பு), ஜெயபாலன், பிரதாஸ் (பிரான்ஸ்), பிரதீபன், பிரநிதன், கண்ணதாசன் (ஜேர்மனி), கல்பனா, கௌரி, சுகிர்தா, சுகிர்தன், சுரேன், சுவேதன், குயிதா (ஜேர்மனி), சுனிதா (ஜேர்மனி), சஞ்சிவன் (ஜேர்மனி), நிருஜன் (ஜேர்மனி), ரம்யா (ஜேர்மனி), தாருகா (சுவிஸ்), சந்தீப் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-04-98) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
வாகையடி வீதி, சாவகச்சேரி. (54874)

# வீரப்பன் மீண்டும் சரணடைய விருப்பம்

## முதல்வருக்கு ஒலிநாடா

சென்னை, ஏப். 12

பிரபல சந்தன மரக் கடத்தல் பேர் வழியான வீரப்பன் தான் சரணடைய விரும்புவதாகத் தெரிவிக்கும் ஒலி நாடா தகவலை முதல்வர் கருணாநிதிக்கு மீண்டும் அனுப்பி வைத்துள்ளார்.



குறிப்பிட்ட காலவரம்புக்குள் சரணடைவது குறித்தும், அதற்கான நிபந்தனைள் பற்றியும் வீரப்பன் அந்த ஒலிநாடா மூலம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சரணடைந்துள்ள தனது கூட்டாளிகள் மூவரும் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதைப் பொறுத்து தானும் சரணடையவுள்ளதாக வீரப்பன் கூறியுள்ளார்.

''நெற்றிக்கண்'' வார சஞ்சிகையின் ஆசிரியர் மூலமாகவே இம்முறை வீரப்பன் தனது ஒலிநாடாவை அனுப்பி வைத்துள்ளார். (ஐ)

# உயிர் பறிக்கும் பூகம்பம் உயிரைக் காத்த அதிசயம்!

பூகம்பம் என்றாலே பேரழிவுதான் நினைவுக்கு வரும். வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் பூகம்பத்தால் ஆயிரக்கணக்கானோர் மண்ணோடு மடிந்த சம்பவங்கள் ஏராளம், ஏராளம்.

ஆனால் இத்தாலியில் பூகம்பத்தால் ஒருவர் உயிர் பிழைத்த அதிசயம் நடந்துள்ளது.

கோமாவில் படுத்து இனி பிழைப்பது அரிது என்று டாக்டர்களால் கைவிடப்பட்ட இளம் பெண்ணை பூகம்பம் தட்டி எழுப்பி உள்ளது.

அப்பெண், 20 நாள்களுக்கு முன் விபத்து ஒன்றில் சிக்கி பலத்த காயமடைந்தார். இதனால் மூளைக்குச் செல்லும் ரத்தம் தடைப்பட்டது. ஊன் இன்றி, உணர்வு இன்றி கோமாவில் விழுந்தார்.

வெள்ளிக்கிழமை காலை 9. 26 மணிக்கு அப்பகுதியில் பூமி அதிர்வு ஏற்பட்டது. கட்டடங்கள் குலுங்கின, மக்கள் பீதியடைந்து திறந்த வெளி நோக்கி ஓடினர். ஆனால் அதிர்ஷ்டவசமாக பெரிய சேதம் இல்லை.

அதேவேளையில் கோமாவில் இருந்த அப்பெண் யாரோ எழுப்பியது போல் விழித்து எழுந்தாள். டாக்டர்களுக்கு ஆச்சரியம்.

இதற்கு முன் இதுபோன்ற அதிசயத்தை நான் பார்த்ததே இல்லை என்றார் டாக்டர் பையாபிரி. அறிவியல் ரீதியாக இதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ-10)

# "கோரி" ஏவுகணைக்கு வரவேற்பு

இஸ்லாமாபாத், ஏப். 12

கடந்ததிங்களன்று பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்திய ஏவுகணைப் பரிசோதனையை முஸ்லிம் நாடுகள் பல வரவேற்றுள்ளன.

இந்தியாவின்ஓர்இந்துஅரசனைத் தோற்கடித்த 'கோரி' என்ற ஆப்கானிஸ்தான் மன்னனின் பெயரையேஇந்த ஏவுகணைக்கு பாகிஸ்தான் சூட்டியுள்ளது.

700 கிலோ நிறையுள்ள இந்த ஏவுகணை 1500 கிலோ மீற்றர் தூரம் சென்று தரை இலக்குகளைத் தாக்கவல்லது. (ஐ)

உலக அரங்கில்

# வீரப்பனின் சகாக்கள் சரணடைவு

சென்னை, ஏப். 12

சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் கும்பலைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் மூவர் நேற்று முன்தினம் சென்னையில் பொலீஸாரிடம் சரணடைந்தனர்.

அன்புராஜ், தங்கராஜ், அப்பாசாமி என்ற அந்த மூவரையும் ''நெற்றிக்கண்' வார இதழின் ஆசிரியர் ஏ.எஸ். மணியும், அவரது வழக்கறிஞரும் சென்னைக்கு அழைத்து வந்தனர். பின்னர் அவர்கள் முறைப்படி பொலீஸாரிடம் சரணடைந்தனர். (ஐ)

# குளோனிங் மூலம் பிறந்த கன்றுக் குட்டி மரணம்!

பாரீஸ், ஏப். 12

''குளோனிங்'' முறையில் பிறந்த முதல் கன்றுக் குட்டி கடந்த சனிக்கிழமை மரணமடைந்தது. தசை தொற்று நோய் காரணமாக அக்கன்று இறந்தது என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் இந்த கன்றுக் குட்டி பிறந்தது. எளிதில் தொற்றுநோய் தாக்க வாய்ப்புள்ளது என்பதால் மிகவும் சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் அது வளர்க்கப்பட்டது. விஞ்ஞானிகளைத் தவிர பிறர் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. ஆனால் விடீயோ படம் மூலம் பத்திரிகையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் அது காட்டப்பட்டது.

கன்றுக் குட்டி அடைக்கப்பட்டிருந்த அறையில் உள்ள கம்பி ஒன்று குத்தி சதை கிழிந்ததால் அந்த இடத்தில் தொற்றுநோய் தாக்கியது. இருப்பினும் மரணம் நிகழ்ந்தது எவ்வாறு என்பது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இறைச்சிக் கடைக்கு வந்த ஒரு மாட்டின் கர்ப்பப்பையில் வளர்ந்து வந்த 2 மாத சிசுவின் திசுவை எடுத்து இந்த கன்றுக் குட்டி உருவாக்கப்பட்டது.

வழக்கமாக உயிர் அணு சினைமுட்டையுடன் இணைந்தால் தான் கரு உண்டாகும். ஆனால் வளர்ச்சி பெற்ற திசுவை எடுத்து அதை சினை முட்டையில் வைத்து கருத்தரிப்பது ''குளோனிங்'' முறையாகும். (ஐ-10)

## சவூதியில் சன நெரிசல்:

# 100 இற்கும் அதிகமான ஹஜ் யாத்திரிகர்கள் பலி!

லண்டன், ஏப். 12

சவூதி அரேபியாவின் மக்கா நகரில் புதனன்று ஏற்பட்ட சன நெரிசல் காரணமாக 100 இக்கும் மேற்பட்ட ஹஜ்யாத்திரிகர்கள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த வருடம் ஹஜ்யாத்திரையில் கலந்து கொள்வதற்காக 100 நாடுகளைச் சேர்ந்த 17 இலட்சத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் மக்கா நகர் சென்றுள்ளனர்.

சாத்தானைக் கல்லால் அடிப்பது போன்ற அடையாளச் சடங்கு ஒன்றில் கலந்து கொள்ள மெனா என்ற இடத்தில் யாத்திரிகர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்த போதே இந்த சனநெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெரிசலில் சிக்கிப் பலியானவர்களில் 24 பேர் இந்தியர்கள் ஆவர் இவர்களின் பெயர் விவரங்களை இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இச்சம்பவத்தில் இலங்கையர் எவரும் பலியாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சவுதி அதிகாரிகளின் பாதுகாப்பு விதிமுறைகளைப் யாத்திரிகர்கள் புறக்கணித்தாலேயே சன நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்திய சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் பட்டப்பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்கான பட்டமளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

# மதில் இடிந்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கடந்தகால விமானக்குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களினால் அதிர்ந்து கிடந்த மதில் சுவர் ஒன்று இடிந்ததில் ஒருவர் காயம் அடைந்தார்.

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தியாகராசா கனகராசா (வயது 51) என்பவரே காயம் அடைந்தவராவார்.

மதில்சுவரைப் பிடித்து ஏற முயன்றபோதே அது இடிந்து வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (இ-15)

# தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 88 பொலீஸார் போர் முனைக்கு

கொழும்பு ஏப் 12

கொழும்பில் தேசிய புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய 88 பொலீஸார் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து வடக்கு - கிழக்கு போர் முனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலீஸ் சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் கட்டாய இடமாற்ற திட்டத்தின் கீழ் இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வுத்துறையில் விசேட பயிற்சி பெற்ற இவர்கள் வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தேசிய பாதுகாப்புக்கு எதிரான செயல்கள் குறித்த பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

இவர்களின் இடத்துக்கு புதியவர்களை நியமிக்க விசேட பரீட்சை ஒன்று நடத்தப்படவிருக்கிறது. (ஐ-3)

# ஒன்றுகூடல்

வலி. தென்மேற்கு, ஏப். 12

ஈஸ்டர் - புத்தாண்டை முன்னிட்டு சுகவாழ்வு நிலையத்தினரால் நடத்தப்படவுள்ள ''குழந்தைகளின் வளர்ச்சி - அபிவிருத்தி'' பற்றிய ஒன்றுகூடல் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சுகவாழ்வு நிலைய அலுவலகத்தில் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-185)

# ஒய்வூதியர் ஏமாற்றம்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஒய்வூதியர்களின் ஏப்ரல் மாத வவுச்சர்கள் கடந்த நான்காம் திகதி கிடைத்துள்ள போதிலும் அக்கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் வங்கிகளுக்கு வந்து சேராததால் புதுவருட தேவைக்கு ஒய்வூதியத்தை எதிர்பார்த்திருந்த ஒய்வூதியர்கள் வங்கிகளுக்குச் சென்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

வங்கி அலுவலர்கள் இனி அடுத்த புதன்கிழமையே நடைபெறுமென்பதால் புதுவருடத்தைக்கொண்டாட முடியவில்லை என ஒய்வூதியர்கள் தெரிவித்தனர்.

ஏப்ரல் மாதத்திற்குரிய ஒய்வூதிய கொடுப்பனவுகள் ஏப்ரல் 6 ஆம் திகதியே வழங்கப்படல் மேண்டுமென ஒய்வூதியப் பணிப்பாளர் பணித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

# ஈஸ்ரர் விழா

கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் எழிலூர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஈஸ்ரர் விழா இன்று ஞகயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நிலைய விளையாட்டு மைதானத்தில் [illegible] யே. விமலதாஸ் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

# தொலைக்கல்வி பரீட்சை

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியின் பரீட்சைகள் இம்மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

தொலைக்கல்வி முறையில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களில் அரை இறுதிப் பரீட்சை (பகுதி 1) இறுதிப் பரீட்சை (பகுதி 2) ஆகியவற்றில் சித்தியடையாதவர்கள், நூனசித்தி அடைந்தவர்கள் இப்பரீட்சையில் தோற்றவுள்ளனர். (ஐ-11)

# புத்தாண்டு நிகழ்வுகள்

வலிகாமம் தெற்கு, ஏப். 12

சித்திரைப் புத்தாண்டு தினத்தை ஒட்டிய கலை, இன்னிசை நிகழ்ச்சி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5. 30 மணிவரை சீரணி நாகம்மாள் கோயில் வீதியில் நடைபெற உள்ளன. (ஐ-152)

★ ★ ★

அச்சுவேலி, ஏப். 12

இடைக்காடு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடத்தும் புதுவருட விளையாட்டு விழா இன்று முதல் மூன்று தினங்கள் இடைக்காட்டில் வித்தியாலய அதிபர் வி. எஸ் சித்திரவடிவேல் தலைமையில் நடைபெறும். புதுவருட விளையாட்டுவிழாவில் கரப்பந்தாட்டம், தாச்சிப் போட்டி, மரதன்ஓட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம், சைக்கிள்ஓட்டம் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன. (ஐ-11)

★ ★ ★

தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நாவற்குழி பிரதேச சபைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் ஒன்றிணைந்து நடத்தும் ''மக்கள் உறவு விளையாட்டுப் போட்டிகள்'' இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினர்களாக தனங்கிளப்பு இராணுவ முகாம் பொறுப்பதிகாரியும், சாவகச்சேரி பிரதேச செயலரும் கலந்து கொள்வர்.

# பண்ணையாளரிடமிருந்து பால் கொள்வனவு

அளவெட்டியில் அமைந்துள்ள கிராமியக் கால்நடை அபிவிருத்தி நிலையம் பொது மக்களிடமிருந்து பாற்கொள்வனவை மேற்கொள்ள இருக்கின்றது.

பாலினை மேற்படி நிலையத்திற்கு வழங்க விரும்பும் பண்ணையாளர்கள் தமது பெயர்களையும், தாம் வழங்க இருக்கும் பாலின் அளவையும் இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன் நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும், காலை ஆறு மணிக்கு முன்பும், பிற்பகல் 12. 15 மணிக்கு முன்னரும் பால் வழங்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்படும் பாலின் கொடுப்பனவுகள் மாத இறுதியில் வழங்கப்படும். (ஐ-152)

# கலைஞானி கண்காட்சி

கலைஞானி அரும் பொருள் பணிமனையின் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது.

பாடசாலை விடுமுறையைக் கருதி எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் முதல் 10 தினங்களுக்கு இக்கண்காட்சி இடம் பெறுமென பணிமனை நிர்வாகி செல்வரத்தினம் தெரிவித்தார்.

பரமேஸ்வராச் சந்தியில் உள்ள பணிமனையில் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது. (ஐ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலகத்தில் விரைவில் இலங்கை வங்கிக்கிளை

யாழ். செயலகத்தில் மீண்டும் இலங்கை வங்கிக்கிளை செயற்படவுள்ளது.

வட பகுதியில் போர் நிலைமைகள் காரணமாக கடந்த 11 வருடங்களுக்கு மேலாக இவ் வங்கிக்கிளை மூடப்பட்டிருந்தது.

தற்போது இதனை மீண்டும் செயற்பட வைப்பதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இது சம்பந்தமாக வங்கி முகாமையாளரும், சில உத்தியோகத்தரும் செயலக வங்கிக்கிளையைப்பார் வையிட்டுச் சென்றுள்ளனர்.

(ஐ-100)

## தலைநகரில் தமிழர்கள்

# கைது விவகாரம் குறித்து 23 ஆம் திகதி மாநாடு

கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவதை நிறுத்த மாற்று ஏற்பாடுகள் எதையாவது நடைமுறைப் படுத்தலாமா என்பது குறித்து ஆராய எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

படை அதிகாரிகள், தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள், சமய அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில் தமிழர் கைதை நிறுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

(ஐ-3)

# இசைவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 12

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் 16 ஆவது இசை விழாவின் இரண்டாம்நாள் நிகழ்வுகள் ''திருப்பதி ஸ்ரோர்ஸ்'' ஆதரவில் இன்று நடைபெறவுள்ளன.

முற்பகல் 9மணிக்கு ஆரம்பமாகும். காலை நிகழ்வில் விசேட நிகழ்ச்சிகளாக நாதஸ்வரஇசை, பஞ்சரத்தின ஆராதனை, பாட்டு என்பன இடம் பெறவுள்ளன.

பிற்பகல்3 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வில் விசேட நிகழ்ச்சிகளாக மங்கள இசை, வயலினிசை, பாட்டு, வீணையிசை, இசைக்கச்சேரி என்பன இடம்பெறும்.

இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

(ஐ-8)

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

# கிளைக்குழுத் தேர்தல் — 1998

நியமனப்பத்திரங்கள் 1998-05-02 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9மணி தொடக்கம் மு.ப. 10 மணி வரை (புதிய நேரம்) ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| 01. | தெல்லிப்பழை. | சங்கத் தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம். |
| 02. | துர்க்காபுரம். | துர்க்காபுரம் கிளை நிலையம். |
| 03. | வவுணாவத்தை. | வவுணாவத்தை கிளை நிலையம். |
| 04. | விராங்கொடை | சங்கத் தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம். |
| 05. | பன்னாலை. | ,, ,, ,, |
| 06. | விழிசிட்டி | ,, ,, ,, |
| 07. | கருகம்பனை. | ,, ,, ,, |
| 08. | இளவாலை. | இளவாலை கிளை நிலையம். |
| 09. | கீரிமலை. | சங்கத் தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம். |
| 10. | சிமெந்து தொழிற்சாலை முன்பாக (காங்கேசன்துறை) | ,, ,, ,, ,, |
| 11. | நடேஸ்வராக் கல்லூரி அருகில் (காங்கேசன்துறை | ,, ,, ,, ,, |
| 12. | மாவிட்டபுரம். | ,, ,, ,, |
| 13. | அரசடி வீதி, மாவிட்ட புரம். | ,, ,, ,, |
| 14. | கொல்லங்கலட்டி. | ,, ,, ,, |
| 15. | வறுத்தலைவிளான். | ,, ,, ,, |
| 16. | கட்டுவன். | ,, ,, ,, |
| 17. | குரும்பசிட்டி. | ,, ,, ,, |
| 18. | வசாவிளான். | ,, ,, ,, |
| 19. | ஒட்டகப்புலம். | ,, ,, ,, |
| 20. | வசாவிளான்சந்தி. | ,, ,, ,, |
| 21. | பலாலிமேற்கு. | ,, ,, ,, |
| 22. | பலாலிமத்தி. | சங்கத் தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம், |
| 23. | பலாலி கிழக்கு. | ,, ,, ,, |
| 24. | மயிலிட்டிக்கரை. | ,, ,, ,, |
| 25. | மயிலிட்டி கிழக்கு. | ,, ,, ,, |
| 26. | மயிலிட்டிவடக்கு. | ,, ,, ,, |
| 27. | காங்கேசன்துறை. | ,, ,, ,, |
| 28. | பளை வீமன்காமம். | ,, ,, ,, |
| 29. | வீமன்காமம். | ,, ,, ,, |
| 30. | தையிட்டி. | ,, ,, ,, |
| 31. | ஊறணி. | ,, ,, ,, |
| 33. | மடத்தடி. | ,, ,, ,, |
| 34. | அரசினர்வைத்தியசாலை அருகில் (தெல்லிப்பழை) | ,, ,, ,, |
| 35. | கலட்டி. | ,, ,, ,, |
| 36. | வசந்தபுரம். | ,, ,, ,, |
| 37. | ஊரங்குனை. | ,, ,, ,, |
| 39. | குட்டியப்புலம். | குட்டியப்புலம் - கோணாவளை கிளை நிலையம் |
| 41. | கிளானை. | சங்கத் தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம். |
| 42. | திருப்பூர், மயிலிட்டி. | ,, ,, ,, |
| 43. | சீந்திப்பந்தல். | சீந்திப்பந்தல் கிளை நிலையம். |
| 44. | மயிலங்கூடல். | சங்கத் தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம், |

★ ஒவ்வொரு கிளையிலும் (9) உறுப்பினர்களைக் கொண்ட கிளைக்குழு தெரிவு செய்யப்படும். இதில் ஆகக்குறைந்தது இருவர் (18) வயதிற்கும் (35) வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆபேட்சகர் நியமனங்களில் ஆட்சேபனை எதுவும் இருப்பின் அன்றையதினம் காலை 10 00 மணி தொடக்கம் 11.00 மணிக்கிடையில் [புதிய நேரம்] தேர்தல்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்து மூலமாக ஒப்படைத்தல் வேண்டும்.

ஒன்பதிற்கு மேற்பட்ட நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யுமிடத்து

வாக்களிப்பு: **09—05—1998** சனிக்கிழமை

நேரம்: காலை **9.00** மணி தொடக்கம் பிற்பகல் **4.00**மணி வரை நடைபெறும்.

குறிப்பு:- நியமனப் பத்திரங்களை **15—04—1998** தொடக்கம் சகல நிவாரணக் கிளைகளிலும், தலைமைக் காரியாலயத்திலும் 10/- வைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

சு. கணேசமூர்த்தி,
தேர்தல் உத்தியோகத்தர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,

கூட்டுறவு அலுவலகம்,
18/10, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
1998-04-09.

(ஐ/3220)

# புலிகளைத் தடை செய்யும் சட்ட விதிகளின் விவரம்

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்யும் அவசர காலச்சட்ட விதிகளின் கீழ் குற்றங்களாக்கப்பட்டுள்ள செயல்கள் தண்டனைக்குரியனவாகும். அந்தக்குற்றங்களைச் செய்வோருக்கு ஆகக் குறைந்தது 7 வருடச் சிறைத் தண்டனையும் 15 வருடத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

தடை செய்யப்பட்டிருக்கும் இந்த அமைப்பினால் பயன்படுத்தப்படுவதற்கென எவராவது நிதியோ சொத்தோ வைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவை பறிமுதல் செய்யப்படும்.

அவ்வாறு பறிமுதல் செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சர் எடுக்கும் தீர்மானத்தை எதிர்த்து எந்த நீதி மன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது.

இச்சட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் 1998 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகாலச் சட்டம் என எடுத்துக்காட்டப்படும்.

சட்டவிதிகளின் விவரம் வருமாறு:

1. தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயர் கொண்ட அமைப்பு இத்தால் தடை செய்யப்படுகிறது.

2. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் ஏனைய ஒவ்வொரு அமைப்புக்கும், ஒவ்வொருவருக்கும் அல்லது குழுவினருக்கும் இச்சட்ட விதியின் கருத்துக்கள் பொருந்தும்.

3. (அ) தடை செய்யப்பட்டுள்ள இந்த இயக்கத்தைக் குறிக்கும் அல்லது அதனுடன் தொடர்பு உள்ளதைத் தெரிவிக்கும் சீருடைகள், சின்னம், அணிகள், இலச்சினைகளை அணிவது —

(ஆ) தடை செய்யப்பட்டுள்ள அதனோடு தொடர்புடைய இந்த இயக்கத்தின் கட்டளைகளுக்கு அல்லது கூட்டத்தில் கலந்து கொள்வது அல்லது அவர்களது இயக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

(இ) தடை செய்யப்பட்டுள்ள இந்த இயக்கத்துக்கு நிதி வழங்குவது அல்லது நிதி சேகரித்துக் கொடுப்பது அல்லது ஆள்களைத் திரட்டிக் கொடுப்பது அல்லது தகவல்கள் கொடுப்பது தடை செய்யப்பட்ட இந்த இயக்கத்தை சேர்ந்த அங்கத்தவர்களுக்கு உதவுவது.

(ஈ) தடை செய்யப்பட்டுள்ள இந்த இயக்கத்தால் அல்லது இயக்கம் சார்ந்தவர்களால் பிரசுரிக்கப்படும் அல்லது எழுத்துக்களை அல்லது பிரசுரங்களை விநியோகிப்பது அச்சடிப்பது, பிரசுரிப்பது.

(உ) தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் எவர் ஒருவருக்கும் எதிரான கைது, விசாரணை அல்லது தண்டனையைத் தடுக்கும் அல்லது அதில் தலையிடும் நோக்கத்துடன் அவரைத் தம்மோடு வைத்திருப்பவர் அல்லது மறைத்து வைத்திருப்பது அல்லது வேறு எந்த விதத்திலும் உதவுவது.

(ஊ) தடை செய்யப்பட்ட இந்த இயக்கத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லுமுகமாக தகவல்களைப் பரிமாறுவது, பரிமாற முற்படுவது அல்லது இயக்கத்தின் தீர்மானங்களை அல்லது கட்டளைகளை தகவல் பரிமாற்றம் செய்வது.

4. (அ) தடைசெய்யப்பட்டுள்ள இந்தஇயக்கத்திற்குப்பயன்படுவதை நோக்கமாகக் கொண்டோ அல்லது பயன்படுத்துவதற்காகவோ யாராவது ஒருவரின் பாதுகாப்பில் பணமோ அல்லது வேறு உடைமைகளோ, பொருள்களோ உள்ளதாக அமைச்சர் தமக்கு ஏற்புடைய முறையில் விசாரணைகளை நடத்தி திருப்திப்படுமிடத்து அத்தகைய பணத்தையோ, உடைமைகளையோ எழுத்து மூலம் உத்தரவு பிறப்பித்து பறிமுதல் செய்யலாம்.

(ஆ) இந்தப் பறிமுதல் செய்யும்முடிவை எடுக்கும்அதிகாரம் முழுக்க முழுக்க பாதுகாப்பு அமைச்சருக்கே வழங்கப்பட்டிருக்கிறது. அவரது முடிவே இறுதியானதும் அறுதியானதுமாகும். இதனை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது

இந்தச் சட்டவிதிகளின் பிரகாரம் மேற்கூறிய யாவும் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இந்தக் குற்றங்களைச் செய்வோருக்கு ஆகக்குறைந்தது ஏழு வருடங்களுக்குக் குறையாததும் பதினைந்து வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத் தண்டனை விதிக்கப்படும்

5. இச்சட்டவிதி குறித்துச் சந்தேகம் எதுவும் எழாமல் இருக்கும் பொருட்டு, இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் காலத்துக்குக் காலம் பாதுகாப்பு அமைச்சருக்கு விசேடமாகக் குறிப்பிடப்படுவதுமான மனிதாபிமான உதவிகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடும் சர்வதேச அமைப்பு இச்சட்டவிதியின் சரத்துக்கள் ஏற்புடையனவல்ல என்று இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

★

## சண்டிலிப்பாயில்

# ச.ச. நிலையங்களிடையே விளையாட்டுப் போட்டி

வலிதென்மேற்கு, ஏப். 12

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சனசமூக நிலையங்களின் சமாசத்திற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் முதற் தடவையாக இடம் பெறவுள்ளதாக பிரதேச செயலக விளையாட்டு உதவியாளர் எம். ஆர். மோகன் தெரிவித்தார்.

முதற்தடவையாக கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் இனிவரும் காலங்களில் போட்டிகள் விரிவுபடுத்தப்படுமெனவும் அவர் கூறினார்.

இப்போட்டிகளில் பங்குபற்றிவெற்றி பெறும் வீரர்களுக்கான பரிசில்களும்சான்றிதழ்களும் இம்மாதம் இறுதியில் வழங்கப்படும்.

(ஐ-185)

# ஆங்கில தட்டச்சுப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 12

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அனுசரணையுடன் இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தால் நடத்தப்படவுள்ள ஆங்கிலத் தட்டச்சுப் பயிற்சி நெறிக்கான ஆரம்ப விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

(ஐ-ரீ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச செயலகத்தில் மின்சார வசதி இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 12

நல்லூர்ப் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட 'போட்டோ பிரதி இயந்திரம் மின்சார வசதி இல்லாத காரணத்தால் இயங்க முடியாத நிலையில் உள்ளது.

நீண்டகாலத்திற்கு முன்பே இந்த இயந்திரம் நல்லூர்ப் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டு விட்டது. ஆயினும் அதனை இயக்குவதற்குத் தேவையான மின் பிறப்பாக்கிகள் இன்னும் வழங்கப்படவில்லை. தற்போது அவசரத் தேவைகளுக்குப் போட்டோப்பிரதி எடுக் வேண்டுமானால் வெளியேநீண்டதூரம் செல்ல வேண்டிய நிலையில் ஊழியர்கள் உள்ளனர்.

(ஐ-ரீ)

## சங்கீத சபை நடத்தும் செயன் முறைத் தேர்வுகள்

வட இலங்கை சங்கீதசபை ஆண்டு தோறும் நடத்தும் சங்கீதம், பரதம், கதகளி, பண்ணிசை, மிருதங்கம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் நாடு முழுவதுமாக 48 நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இம்மாத இறுதி வரை தினமும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை பரீட்சை நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் இருந்து 10 ஆயிரத்து 500 பரீட்சார்த்திகள் இப் பரீட்சைகளில் தோற்றவுள்ளனர். அவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேர அட்டவணை என்பன ஏற்கனவே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்து விடுமுறை தினங்கள் வருவதால் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தமக்குரிய தபாலகங்களுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்கீத சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)

## சிறுவர்களுக்கு மீண்டும் 'திரிபோஷா' கிடைக்கும்

கடந்த 2 வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த ''திரிபோஷா'' மா விநியோகத்தை மீண்டும் ஆரம்பிப்பது என சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்துள்ளார்.

இதன்படி மாகாணங்களிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைகள் ஊடாக அடுத்த மாதத்திலிருந்து ''திரிபோஷா'' மா விநியோகிக்கப்படவுள்ளது.

சர்வதேச ''கெயர்'' நிறுவனத்தின் உதவியுடன் 1973 ஆம் ஆண்டிலிருந்து 5வயதிற்குட்பட்ட மந்தபோஷாக்குள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் 'திரிபோஷா' மா வழங்கப்பட்டுவந்தது. இருப்பினும் 1993 ஆம் ஆண்டில் இந்த விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டது.

'திரிபோஷா' விநியோகம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறுவர்களிடையே மந்தபோஷாக்குத் தன்மை அதிகரித்துள்ளதாக மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து ஜா-எலவிலுள்ள ''திரிபோஷா'' தொழிற்சாலையை நவீன மயமாக்கி உள்நாட்டு மூலப் பொருள்களைப் பயன்படுத்தி 'திரிபோஷா' மாவை உற்பத்தி செய்யுமாறு சுகாதார அமைச்சர் பணித்துள்ளார்.

(ஐ-10)


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்:

நிகழும் ஈசுர வருடம் பங்குனி மாதம் 21 ஆம் நாள் (04—04—1998) சனிக்கிழமை சிவபதமடைந்த

**சிவஸ்ரீ சோமசுந்தரஐயர் சதாசிவக் குருக்கள்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் ஆன்ம சாந்திக் கிரியைகள் பின்வருமாறு நடைபெறும்.

தசாகம்: பங்குனி 30-ந் திகதி 13-04-1998 திங்கட்கிழமை பகல் 11 மணி வரையில்

ஏகோதிட்டம் + மாசிகம் சித்திரை 2-ந் திகதி (15-04-1998) புதன்கிழமை

சபிண்டீகரணம்: சித்திரை 3-ந் திகதி (16-04-1998) வியாழக்கிழமை

கிருஹயக்ஞம்: சித்திரை 4 ஆம் திகதி (17-04-1998) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணி

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(சி/ 3388)


# விருது பெறுவதற்குப் பொலீஸில் தகுதியான எவரும் இல்லையா?

## தாம் புறக்கணிப்பு எனபொலீஸார் கருத்து

கொழும்பு ஏப், .12

ஜனாதிபதி தலைமையில் கடந்த திங்களன்று நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த எவருக்கும் விருது வழங்கப்படவில்லை.

விருது பெறுவதற்குத் தகுதியான எவரும் தனது திணைக்களத்தில் இல்லை என பொலீஸ் மா அதிபர் எழுத்து மூலமாக கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி ஜனாதிபதிக்குத் தெரிவித்ததை அடுத்தே பொலீஸார் எவருக்கும் விருது வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நடைமுறையில் உள்ள சம்பிரதாயப்படி முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் ஆகியோரின் சிபார்சுகளின் பேரிலேயே வீரப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலீஸாரிடையே வீரப் பதக்கம் பெறத் தகுதியானவர்கள் உள்ளனர் எனப் பொலீஸார் கருதுகின்றனர்.

இந்தப் பொலீஸாரில் பலருக்கு பல சந்தர்ப்பங்களில் பதவி உயர்வுகள் மாத்திரமின்றி பெருமளவு நிதி அன்பளிப்புகளும் பொலீஸ் மா அதிபரால் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த எவரது பெயரும் பொலீஸ் மா அதிபரால் சிபார்சு செய்யப்படாதது குறித்து பொலீஸார் குழப்பமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திங்களன்று இடம்பெற்ற விருது வழங்கும் விழாவில் முப்படைகளையும் சேர்ந்த 76 வீரர்களுக்கு வீரப் பதக்கங்கள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

(இ-10)

## சுதேசிய திருநாள் விழா

அரியாலை, ஏப். 12

அரியாலையில் ஆரம்பமாகி உள்ள சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு பிற்பகல் 2. 30 மணி முதல் மு. விசுவநாதன் தலைமையில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக பதிவாளர் க. குணராசா பிரதம விருந்தினராகவும், இளைப்பாறிய அதிபர் க.சிவராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சமூகசேவை, கலை, விளையாட்டு, கல்வி ஆகிய துறைகளில் நால்வர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கலை நிகழ்வுகளாக ''காலணி சுமந்த காவலன்'' என்னும் புராண நாடகம் இடம்பெறும்.

இன்றுகாலை 6.30மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் மரதன் ஓட்டப்போட்டி ஆரம்பமாகும்.

(ஐ-17)

## மாணவ குடும்ப நல சேவை; 20 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை

திருநெல்வேலி, ஏப். 12

யாழ். மாவட்டத்திலிருந்து மாணவ குடும்ப நல சேவை சுகாதார உத்தியோகத்தர்கள் பதவிக்கு விண்ணப்பம் செய்திருந்த 63 பேருக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் கடந்த ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்பு அறிவித்தலுக்கு இணங்க யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கே இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

உயர்ந்த கல்வித்தகைமை விதிக்கப்பட்டிருந்ததால் யாழ். மாவட்டத்திலிருந்து போதுமான அளவு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது. விண்ணப்பித்தவர்கள் குறைவாக இருப்பதால் எழுத்துப் பரீட்சை நடத்தாது நேர்முகப் பரீட்சையை நடத்தி ஆள்களைத் தெரிவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில்நூற்றுக்கு மேற்பட்ட குடும்ப நலசேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

(ஐ-135)

## மீனவருக்கு குடும்ப அட்டை

யாழ்ப்பாணம் ஏப். 12

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வசிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு தனியான குடும்பப்பதிவு அட்டைகளை வழங்கும் பணியினை மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

சண்டிலிப்பாய், சுழிபுரம், ஊர்காவற்றுறை, குருநகர் ஆகிய பிரிவுகளில் பெரும் எண்ணிக்கையானோர் இவ் குடும்பப் பதிவு அட்டைகளைப் பெற விண்ணப்பித்துள்ளனர்.

(ஐ-7)


## தாதி தேவை

யாழ். ராஜன் வைத்திய நிலையத்திற்கு பெண்தாதி தேவை. விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

155A,மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்.
[ஈழநாடு காரியாலயம் அருகில்] (54863)


## மருதனார் மடத்தில் நடந்த புத்தாண்டு விழா நிகழ்ச்சி

வலிகாமம் தெற்கு, ஏப். 12

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு 513 ஆவது படை யணியினரின் ஏற்பாட்டில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலைமுதல்மாலைவரை பல்வேறு விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காலையில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியன நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து பல்வேறு விளையாட்டுக்கள் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

விளையாட்டுக் கதம்ப நிகழ்வுகளில் சிறுவர்களுக்கான பணிஸ் சாப்பிடுதல், தேசிக்காய் ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல் மற்றும் யானைக்கு கண் வைத்தல், கிறிஸ் கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை, தடையோட்டம், விநோத உடை, கயிறு இழுத்தல், கிடுகு பின்னுதல், சங்கீதக்கதிரை போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றன.

மாலையில் நடைபெற்ற கலாசார நிகழ்வுகளில் புத்தாண்டு அழகுராணி தெரிவு, சிரிப்பூட்டல், அழுகையூட்டல், இன்னிசை, பல்குரல் மன்னன் ஈழத்து சதனின் பல்வேறு குரல்ஒளி ஆகியன இடம்பெற்றன. 513 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி டி. யூ. குணசிங்க தலைமையில் படையினரால் நடத்தப்பட்ட இந் நிகழ்வில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர்கள், கல்விப் பணிப்பாளர்கள், வங்கியாளர்கள், கூட்டுறவாளர்கள், வணிகர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

(ஐ-152)

## கந்தரனுபூதி விழா

யாழ்ப்பாணம், ஏப்.12

மீசாலை சித்திர வேலாயுதர் இந்து மன்றம் நடத்தும் கந்தரனுபூதி 1008 ஆம் நாள் சிறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி இந்து மன்றத் தலைவர் க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

(ஐ-4)


**மலரும் புத்தாண்டில் மகிழ்ச்சியான வாழ்வு அமைய**

**எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

அத்தியாவசியப் பொருள்கள் ஆடவர் – நங்கையர்களுக்கான சகலவித உள்ளாடைகள்

Curvform & Carina Brassieres Silvershield Socks & Elastic

10% முதல் 50% வரை விலைக்கழிவு! இன்னும் பலவகைகளைப் பெற்றுக்கொள்ள:

**லிங்கஸ் ஸ்ரோர்ஸ்**

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Sony 2020, 2030, 2032, 2092, 1440.14'' Hitachi20'' Colour, National 370 டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; வீனஸ் தனபாலசிங்கம், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (நாகவிகாரை முன்பாக). [சி/3394]

Sony- 20''Colour- T. V, K.V 2090, K. V 2092, K. V2072 Audio Kit Pioneer Box Sony 50 W 8 ஓம்ஸ் R. X 47 Tape செற், 90 அம்பியர் பற்றறி விற்பனைக்குண்டு. தொடர்பு: 131 (251), அரசடி றோட், கந்தர்மடம் சந்தி அருகில். (54830)

இளஞ்சோடி வான்கோழிகள், மணித்தாரா, சில்க்கி கினிக்கோழி, பாப்படிக்ஸ். பன்ரம். கோழிகளும், குஞ்சுகளும் கறுப்பு நிற பொமனேரியன் பெண்நாய் விற்பனைக்குண்டு. லிங்கமூர்த்தி மயூரன், நவாலி, அரசடி, மானிப்பாய் மகாவித்தியாலயம் அருகில். [54859]

### தவறிவிட்டது

ஜெயபாலன் நளாயினி ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0901014805) 04 - 04 - 1998 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.113, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [54851]

### தேவை

புதிய, பாவித்த பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், றோனியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: 'சாயி' 116, பலாலி வீதி, (சுராச்அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். [54759]

### இறைச்சிக்கோழி

இறைச்சிககோழிகள் விறபனைசகுண்டு. தொடர்பு: No. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [54348]

இறைச்சிக்கோழி (Broi!er) இறைச்சிக்கான ு்சேவல், கல்பேடஸ் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு-40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (54861)

### வாங்கப்படும்

Sony (20 20), (20 32) (20 30) போன்ற நல்ல ரி.வி. (TV) கள் சொந்தப் பாவிப்பில் இருப்பதென்ற அத்தாட்சியுடன் விற்க விரும்பினால் வாங்கப்படும். உதிரிப் பாகங்களுக்காக பழுதத்டைந்த ரி.விக்கள் வாங்கப்படும். தொடர்பு: வீனஸ் தனபாலசிங்கம், B. Sc. Cey, Dip in E!ectronic Engfneering, London, (நாகவிகாரை முன்பாக). [சி/3293]

## ஆங்கிலம் தபால் மூலம்

G.C.E மாணவர்கள் திறமைச்சித்தி பெறவும், ஏனையோர் திறம்பட எழுதப் பேசவும் ஆங்கிலம் தபால் மூலம் பயிற்றப்படுகின்றது. பெறுமதி வாய்ந்த சான்றிதழும் உண்டு. முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட நீள உறையுடன் எழுதவும்.

GERARD JOSEPH
(Director - Training)
LAMPS Ltd.

(தொழில் வாய்ப்புகள் செய்து கொடுக்கும் நிறுவனம்)

76, Maha Veethiya.
(Grand Street)
Negombo.

(54128)

---

Spoken English
with
Grammer
**by A. Britto**

புதிய பிரிவு
ஆரம்பம்: 13-04-1998

நேரம்: காலை 7-00 மணி
(திங்கள், புதன், வெள்ளி)
இடம்:
ஞானபண்டிதர்
வித்தியாலயம் அருகில்

- நிர்வாகி

(சி/3421)

---

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட
3 ஆம் வருட மாணவர்களின்

## இதய அஞ்சலி

3 ஆம் வருட வர்த்தகப்பிரிவு மாணவன்
ப. சிவசங்கரின் அன்புத் தம்பி

## ப. சிவவாசனுக்கு

(2 ஆம் வருட பொறியியல் மாணவன் பேராதனை)
எமது இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இன்று காலை 9 மணிக்கு அஞ்சலி செலுத்துவதற்கான பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து மாணவர்களும் காலை 9மணிக்கு கலைப்பீடத்தில் ஒன்று கூடவும்.

3 ஆம் வருட மாணவர்கள்.

(54860)

---

## வேலை வாய்ப்பு

கொழும்பிலுள்ள
கண்ணாடித் தொழிற்சாலைக்கு

வேலையாள்கள் தேவை.

முன் அனுபவமுள்ள கண்ணாடி ஊதுபவர் (Blower), உதவுபவர் (Helper), குமிழி செய்பவர் (Bubbler) நேரில் கீழ்வரும் முகவரிக்கு 16ஆம் 17ஆம் 18 ஆம் திகதிகளில் (ஏப்ரல்) காலை 8.30 - 11.30 மணிக்கு இடையில் சமுகமளிக்கவும்.

முகவரி:

எஸ். சுந்தரலிங்கம,
சுந்தரம் மில்ஸ்,
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3364)

---

ஏழாலை தெற்கு களபாவோடை,

வசந்த நாகபூஷணி அம்பாள்

## தேவஸ்தானம்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
14 - 04 - 98 செவ்வாய்க்கிழமை
நிகழ்ச்சிகள்

காலை 7. 00 மணி - அபிஷேகம்
காலை 9. 00 மணி - பூஜை
காலை 10. 00 மணி - சொற்பொழிவு
சொற்பொழிவு நிகழ்த்துபவர்
சிவத்திரு குமார சுவாமி ஐயா அவர்கள்
காலை 11. 00 மணி - சுவாமி உலாவருதல்
நண்பகல் 12. 00 மணி - பிரசாதம் வழங்குதல்
விசேட மேளக்கச்சேரி
உதயநாதன் குழுவினர், இணுவில்
மாணிக்கவாசகர் குழுவினர், உரும்பிராய்

பங்குனி கடைசித்திங்களை முன்னிட்டு **13-04-98** திங்கள் பகல் 10. 30 பூஜையைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

— தேவஸ்தானம்

(54857)

---

## வாழ்த்துகின்றோம்



திருநிறை

## மா. தர்மலிங்கம்

அரச திணைக்களங்கள் பலவற்றின் முன்னாள் தலைமை லிகிதரும், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க கிராம வங்கி முன்னாள் முகாமையாளரும், சமூக நல விடயங்களில் மிக்க ஈடுபாடுள்ளவரும், உச்சிற்பதி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் நிதிப் பொறுப்பாளரும் எமது நிலைய கௌரவ காப்பாளருமாகிய

## உயர்திரு. மாணிக்கம் தர்மலிங்கம்

அவர்கள்

19 - 03 - 1998 இல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ் செய்து பதவியேற்றுக்கொண்டார்.

அன்னாரது மேன்மைமிகு சேவைக்கும், அரிய ஆற்றலுக்கும் கிடைத்த சிறப்புக்கு எங்கள் உளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்!

நிர்வாகிகள்,
ஜனசக்தி சனசமூக நிலையம்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

இன்று (12 - 04 - 98) ஞாயிறு பி.ப 3.30 மணிக்கு மேற்படி நிலையத்தில் பாராட்டு நிகழ்வு நடைபெறும்.

(சி-3359)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 02 — 1948

மறைவு: 24 — 04 — 1997

திருமதி

## சரஸ்வதி செல்வராஜா

உன்னுடைய எழில் முகம் எம்மை விட்டகலவில்லை. அன்னையாய், தந்தையாய் எமை ஆதரித்து விட்டு எங்கே போய் விட்டாய்? சொல்! சொல்! சொல்! சரஸ்வதியே!

உமது பிரிவால் துயருறும்:
கணவர், அப்பா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர். மருமக்கள், பெறாமக்கள்

தகவல்;
இ. இராஜேஸ்வரி

நாவற்குழி கிழக்கு,
கைதடி.

(54841)

---

வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு **மாபெரும் மலிவு விற்பனை**

❈ நங்கையர்க்கேற்ற புதிய சாறி வகைகள் ❈ ஸ்கேட் அன் பிளவுஸ், ❈ கவுண் வகைகள்
❈ சிறுவர்க்கேற்ற பேபிசூட் ❈ ஆடவர்களுக்கேற்ற ரவுசர்கள் ❈ சேட் ❈ ரீ சேட் வகைகளையும்
மற்றும் துணிவகைகள் அனைத்தையும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ளலாம்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! முந்துங்கள்!! இச்சலுகை சில தினங்களுக்கு மட்டுமே!!!

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்** 77, பெரியகடை, யாழ்ப்பாணம். (54714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மேன்மேலும் அப்பட்டம்!

வலிகாமம் வடக்கில் உள்ள பிரதான பாட சாலைகளில், தெல்லிப் பழையில் உள்ள மகாஜனக் கல்லூரி, யூனியன் கல் லூரி. வசாவிளானில் உள்ள மகாவித்தியாலயம் ஆகிய மூன்றும் அடங்கும்.

வலி-வடக்கில் மக்கள் படிப்படியாக, மெதுமெது வாகவே மீளக்குடியேற்றப் படுகிறார்கள். இதுவரை தெல்லுப்பழை கிழக்குப் பிரதேசம் வரையிலும், ஏழாலை-குப்பிளான் வரை யிலுமே மக்கள் மீளக்குடி யமர அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

மக்கள்மீளக் குடியமர்ந்த தெல்லிப்பழை கிழக்குப் பகுதியிலிருந்து மகாஜனக் கல்லூரி சுமார் முக்கால் மைல் தொலைவிலும் யூனி யன் கல்லூரி சுமார் ஒரு மைல் தூரத்திலும் அமைந் துள்ளன. அது போன்றே குப்பிளானில் இருந்து சுமார் ஒரு மைல் தொலை விலேயே வசாவிளான் மகாவித்தியாலயம் அமைந் துள்ளது.

இக்கல்லூரிகள் இப் போது வெறும் ஓலைக் கொட்டில்களிலும் தனி யார் கட்டடங்களிலும் இயங்குகின்றன.

அண்மித்த தூரத்தில் கட்டட வசதிகளுடன் பாட சாலைகள் அமைந்திருக்க மாணவர்கள் வெகுதூரம் சென்று ஓலைக்கொட்டில் களில் பயிலும் நிலை குடா நாட்டில் இனியும் தொடர வேண்டுமா?

போர் நடைபெற்றகாலத் தில்,இடம்பெயர்ந்த காலத் தில் அடிப்படை வசதி யீனங்கள் மிகப் பலவற்றுக் கும் மத்தியில் குடாநாட்டு மாணவர்கள் தமது கல்வி யைப் பயின்றார்கள் என்பது உண்மைதான்.

அதனைக் காரணம் காட்டி அல்லது முன்னுதா ரணம் கொண்டு —

குடாநாட்டில் போர் நடக்கவில்லை; அரசாங் கப் படைகளின் பூரண கட்டுப்பாட்டில் அது வந்து விட்டது; சிவில் நிர்வாகம் தங்கு தடையில்லாமல் நடைபெறுகின்றது; என்று சொல்லிக் கொண்டும் — உலகம் முழுவதற்கும் பறை சாற்றிக்கொண்டும்—

இப்போதும் குடாநாட்டு மாணவர்கள்—வலி.வடக்கு மாணவர்கள் — நடந்து களைத்தும் பல வசதியீ னங்களுடனும் பயிலவேண் டும் என்று அரசு எதிர் பார்ப்பது ஏன்?

குறிப்பிட்ட மூன்று பாட சாலைகளின் கட்டடங் களும் உச்சப் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதால் அவற்றை அங்கு இயங்க அனுமதிக்க முடியாது. வேண்டுமானால் வேறு இடங்களில் கட்டடங்கள் அமைத்துத் தரலாம் என்று பாதுகாப்புப் பிரதி அமைச் சர் அனுருத்த ரத்வத்தை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டார்.

எதிர் காலத் தமிழ்ப் பிர ஜைகளாக இன்றைய குடா நாட்டு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை விட, அரச படையினரின் பாதுகாப்பைப் பேணுவது தான் அவருக்கு — அரசுக் குப் பிரதானம்—முக்கியம்!

தமிழ் மாணவரின் கல்வி உரிமை மறைமுகமாகப் பறிக்கப்படுவதற்குஇதனை விட வேறு என்ன உதார ணம் வேண்டும்? அரசு பாதுகாப்பைத தலையில் தூக்கி வைத்து ஆடும் வரைக்கும் தமிழர்களுக்கு எந்த உரிமையும் கிடைக் காது என்பது மேன்மேலும் அப்பட்டமாகின்றது.

# புதுவருட கருமமும் பலனும்

வெகுதானிய வருடம் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை பிறக்கிறது. குடா நாட்டில் புழக்கத்தில் உள்ள வாக்கிய பஞ்சாங்கம், திருக் கணித பஞ்சாங்கம் ஆகிய இரண்டிலும் கூறப்பட்ட புதுவருட கரும விவரங்கள் மற்றும் சுருக்கமான வருட பலன் ஆகியவற்றை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

### வாக்கியம்

கலியுகாதி அத்தினம் 1862451 நாடி 51 விநாடி 52 தற்பரை 30க்கு சரியான ஈசுர வருடம் பங்குனி மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை பின் இரவு நாடி 51 விநாடி 52 (மணி 2.51 இல்) அபர பட்ச துதியைத் திதியில் விசாக நட்சத்திரத்தின் முத லாம் பாதத்தில் சித்தி நாம யோகத்தில் கரசக் சரணத் தில் கும்பலக்கினத்தில் விருச்சிக நவாம்மிகத்தில் புதன் காலவோரையில் சனி சூக்குமவோரையில் ராசத குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய காகம் அரசுத் தொழிலும் சூக்கும பட்சி உண்டித் தொழிலும் செய் யும் காலத்தில் இப் புதிய வெகுதானிய வருஷம் பிறக் கின்றது. அன்று முன்னிரவு நாடி 41 விநாடி 52 (மணி 10.51) முதல் மறுநாட் காலை நாடி 1 விநாடி 52 மணி (6.51) வரை விஷீக புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற் பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் இலவமிலையும் காலில் விளா இலையும் வைத்து ஸ்நானம் செய்து வெண்ணிறம் கறுப்புக்கரை அமைத்த புதிய ஆடையா யினும் தரித்து, முத்து நீலம் இழைத்த ஆபரணம்அணிந்து விக்னேஸ்வரர் முதலிய தெய்வ வழிபாடு செய்து குரு பெற்றார் முதலிய பெரி யாரை வணங்கி அவர்களி டம் ஆசி பெற்று பந்துமித் திரர்களுடன் அளவளாவி அறுசுவை அமைந்த உண்டி களுடன் தயிர்ச்சோறு உப்பு என்பவை சேர்ந்து அருந்தி சுகந்த வாசனைத் திரவியம் சந்தனம், புஷ்பம் அணிந்து தாம்பூலம் தரித்து கண்ணாடி யில் முகதரிசனம் செய்து புது வருஷ பலன்களை நன் காராய்ந்து மங்கள கரமாக சயனித்து மறுநாளாகிய வெகுதானிய வருஷம் சித் திரை மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை யில் நித்தியநைமித்திய கர் மானுஷ்டானங்களைமுடித்து தத்தம் வீடுகளில் சூரியனுக் குப் பொங்கல் பூசைகள் செய்து முன்போல் போசன பூஷணாதிகளை செய்து மகிழ்ந்து மங்கள கரமாக வாழலாம்.

#### மருத்து நீர்

தாழம் பூ, தாமரைப் பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங் கழு நீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளைச் சுத்த சலத்திலிட்டுக் காய்ச்சிக் கொள்க.

#### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

புனர்பூசம், சித்திரை 3, 4 ஆம் கால்கள், சுவாதி விசா கம், பூரட்டாதி, உத்திரட் டாதி, ரேவதி இவற்றிற் பிறந்தோர் தவறாதுமருத்து. நீர் தேய்த்து ஸ்தானஞ் செய்து தானதரும வழிபாடு செய்து சங்கிரமதோஷத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

#### குரு சரர பலன்

குருவருஷாதியாக வைகாசி மாதம் 12ஆம் திகதி வரை யும் ஆவணி மாதம் 26 ஆம் திகதி முதல் மார்கழி மாதம் 25 ஆம் திகதி வரையும் கும்பராசியில் நிற்றலால் பருவமழை பயிர்ச் செழிப்பு,தேச சுகம், கலிங்க வங்க தேசத்தாருக்குப்பீடை வைகாசி மாதம் 13 ஆம் திகதி முதல் ஆவணிமாதம் 25ஆம் திகதி வரையும் மார் கழி மாதம் 26ஆம் திகதி முதல் வருடாந்தம் வரைமீன ராசியில் நிற்றலால் மழைக் குறைவு, மிருகங்களுக்குப் பீடை என்பன உண்டாம்

#### பொதுப்பலன்

இவ்வருடம் தேச சுகம், நல்ல மழை, காற்றுக்குழப் பம், அரசியலில் பெருமாற் றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலையாள் ஆசி ரியர் என்போருக்கு முன் னேற்றம், சட்டத்தரணி களுக்கு கஷ்டம். சங்கீதம் நடனம் நாட்டியம் இவற்றில் முன்னேற்றம், அன்னிய நாணயமாற்று அதிகரித்தல், தொழிலாளர் கிளர்ச்சி, பொருளாதார உதவி, சமாதானத்துக்கு வழி கோலல், பவுண் பட்டு சம விலை புகையிலை விலை ஏற்றம் அந்நிய பயணிகளின் வருகை அதிகரித்தல், வெப் பம் அதிகம்.

### திருக்கணிதம்

ஈசுர வருஷம் பங்குனி மாதம் 3 ஆந் திகதி திங் கட்கிழமை (14 - 04-98) பின் னிரவு உதயாதி தாழிகை 57 - 31 இல் (மணி 5-34)இல் ''பகுதானிய'' என்னும் பெய ருடைய புது வருஷம் பிறக் கின்றது. அன்று நட்சத்திரம் விசாகம் 1 ஆம் - கால் திதி அபரபட்சப் பிரதமை. இது 60 வருட சுற்று வட்டத்தில் 12 ஆவது வருஷமாகும். திங் கட்கிழமை பின்னிரவு நாளிகை 47 - 31 (மணி1-34) தொடக்கம் செவ்வாய்க் கிழமை காலை நாளிகை 7–31 (மணி 9.34) வரையும் மேடசங்கிரமண புண்ணிய காலம் ஆகும்.

வருஷம் பிறக்கும் போது உதயலக்கினம் மீனம் ஆகும். இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலை யில் விளாஇலையும் காலில் கடப்ப மிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெண்ணி றப் பட்டாயினும் அல்லது வெள்ளை புதுவஸ்திரமாயி னும் தரித்து முத்து சேர்த் திழைக்கப் பெற்ற ஆபரணங் களை அணிந்து நித்திய கர் மானுஷ்டானம் முடித்து கண்ணாடி தீபம் பூரண கும் பம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து விநாயகர் முதலான இஷ்ட குல தேவாராதன தரிசனங் கள் செய்து தத்தம் இல் லங்களில் புதுவருட சூரி யனிற்கு பொங்கல், பூஜை, வழிபாடுகள் செய்து விருந் தினர், நண்பர்களை வர வேற்று, சுற்றத்தினருடன் இருந்து பால் பாயசம், தயி ரன்னம், நெல்லிக்காய்த் துவையல் முதலிய வற்றுடன் அறுசுவைப் பதார்த் தங்களையும் போசனஞ் செய்து சுகந்த சந்தன புஷ் பாதிகளை அணித்து, தாம் பூல மருந்தி, புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற் கருமங் களைச் சிந்தித்து, புது வருட பஞ்சாங்க பலன் களைக் கேட்டு மங்களகர மாக வாழ்வார்களாக,

#### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

புனர்பூசம், சித்திரை 3 ஆம் 4 ஆம் கால்கள், சுவாதி விசாகம், பூரட்டாதி, உத் தரட்டாதி, ரேவதி.

மருத்துநீர் என்பது தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம் அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூ ரம், மஞ்சள் சுக்கு திற்பலி ஆகியவற்றை சுத்தஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாய மாகும். பூவகை கிடையா விடின் அவைகளின் இலை பட்டை, வேர், கிழங்கு, யாதாயினும் உபயோகிக்க லாம்.

#### பொதுப்பலன்

புதுவருடம் பிறக்கும் போது உதயலக்கினம் மீனம் ஆகும். சனீஸ்வரன் மேட ராசியில் பிரவேசித்துக் கொண்டிருக்கிறார். 2 ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய் சனி சேர்க்கை பெறுவது அரசியல் விவகாரங் களுக்கும், அரசியல் தலை வர்களுக்கும், நாட்டு சுபீட் சத்துக்கும் உகந்ததல்ல. அரசியல் தலைவர்களி டையே ஒற்றுமையின்மை, ஒருவரை ஒருவர் தாக்குதல், சட்ட திட்டங்களை நன்கு அமுலாக்க முடியாமை போன்ற பல கஷ்ட பலன் கள் ஏற்பட இடமுண்டு, பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலும் பல இடை யூறுகள் தோன்றும். மக்கள் மீது வரிச்சுமை அதிகமாகும் 3 ஆம் அதிபதி 12 இல் கேது வுடனிருப்பதால் போக்கு வரத்துத்துறை அதிகமாக முன்னேற வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கிறது. போக்குவரத்துக்களில் விபத் துக்களும் அதிகமாகும். புதன் லக்கினத்தில் நீசமடைவ தால் உயர் கல்வி ஸ்தாப னங்களில் அமைதியின்மை, சிக்கல்கள் காட்டும். 6 ஆம் வீட்டில் இராகு இருப்பது தொற்று நோய்களை அதி கரிக்கக் கூடுமாயினும், குரு வின் பார்வை இருப்பதால் அவை கட்டுப்படுத்தப்படும். பொருளாதார அபிவிருத்தி. தொழில் வாய்ப்புக்கள் முத லியன வேகத்திலேயே செயற்படும். நாட்டில் மழை வீழ்ச்சி, விவசாயம் முதலி யன ஓரளவு நற்பலன்தரும்.

★

## மாணவருக்கு இலவசமாக கண்ணாடி

சாவகச்சேரி லயன்ஸ் கழ கத்தினரால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு இலவச கண் சிகிச்சை பரி சோதனை கடந்த செவ்வா யன்று கல்லூரி மண்டபத் தில் நடத்தப்பட்டது.

பரிசோதனையில் மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள மாணவர்களில் பத்துப் பேருக்கு விரைவில் மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

# இயேசுவின் உயிர்ப்பின் அர்த்தமும் உட்பொருளும்உணரப்படவேண்டும்

அருட்சகோதரர் செ. வசந்தகுமார்

திசை தெரியாது கட லிலே தத்தளிக்கின்ற கப்ப லுக்கு சலங்கரை விளக்கம் நம்பிக்கை தருவது போல் கிறிஸ்தவர்களாகிய எமக்கு எமது துன்ப வேளையில் நம் பிக்கையின் நட்சத்திரமாகத் திகழ்வது இயேசுக் கிறிஸ்து வின் உயிர்ப்பாகும்.

நாம் வாழுகின்ற தற்காலச் சூழலிலே கிறிஸ்துவின் உயிர்ப்புவிழா அர்த்தமிழந்து செல்வது போன்று தோன்று கின்றது. ஏனென்றால் பலர் இந்த விழாவை ஒரு சம்பிர தாயச் சடங்காகவும், இன் னும் சிலர் இதனை வருடா வருடம் வந்து போகின்ற ஒரு நிகழ்வாகவும் எண்ணி தமது வாழ்வில் இவ் விழாவின் பொருளை உணராது செயற் படுகின்றார்கள்.

உயிர்ப்பு என்பது எங்கோ, எப்போதோ நடந்த ஒரு சம் பவமோ அல்லது கோட் பாடோ அல்ல. மாறாக ஒவ் வொரு நாளும் ஏன் ஒவ் வொரு கணமும் எமது வாழ் விலும் சமூக வாழ்விலும் ஏற்பட்டுக் கொண்டிருக் கின்ற ஓர் அனுபவ நிகழ்வு. எங்கும் மரண ஓலங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்ற எம் மண்ணில் இயேசுவின் உயிர்ப்பின் அர்த்தமும் உட் பொருளும் உணரப்பட வேண்டும், அப்போது தான் நாம் வாழும் சமூகம் உயிர் பெறும்.

அன்று இயேசு முழு மனித விடுதலைக்காக தனது இன் னுயிரை சிலுவை மரத்திலே பலியாக்கி மனிதத்தை மண் ணிலே மகிழ்வுடன் வாழ வைத்தார். இன்று அரசியல, பொருளாதார, சமூக அமைப்புக்களுள் சிக்குண்டு உயிர்பெற முடியாது வாழு கின்ற மக்களுக்கும், இறை அரசின் விழுமியங்களை குழி தோண்டிப் புதைத்து விட்டு கூச்சலிட்டுக் கூத்தாடுகின்ற கும்பலுக்கும் ஆண்டவன் இயேசுவின் உயிர்ப்பு விடிவை யும், விழிப்புணர்வையும் நல்குவதாக அமைய வேண் டும்.

குருதிகொண்டு வரலாறு எழுதப்படுகின்ற எம்மண் ணில் சிறப்பாக வன்னி மண் ணில், கண்ணீரால் தம்கரம் கழுவி வயிற்றுப் பசிபோக்க கையேந்தி நிற்கும் மக்கள் வாழ்வுக்கு இயேசுவின் உயிர்ப்பு சொல்லும் செய்தி என்ன?

மனிதனை மனிதன் மதிக் காது உயிருடனே அவர்களுக் குக் கல்லறை கட்டுகின்ற இந்த மண்ணில் இயேசுவின் உயிர்ப்பு அர்த்தமுள்ள தொன்றாக அமையுமா?

என்றுமனித மாண்பு மதிக் கப்படுகின்ற செழுமையான காலம் எம்மண்ணில் மலர் கின்றதோ அன்றுதான் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா அர்த்தமுள்ள ஒன்றாக' இயேசு கொண்டு வந்த விடு தலைச் செய்தியை மற்றவர் களுக்கு கொடுக்கின்ற ஒன் றாக அமையமுடியும்.

## நாளை

பங்குனி 30
திங்கட்கிழமை
திதி: துதியை
முழுநாளும்
நட்சத்திரம்: சுவாதி
முன்னிரவு 11.25 வரை
காரைக்காலம்மையார்
குருபூஜை
சுபநேரம்: 12.06-1.36
ராகு காலம்: 07.36- 09.06
(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அறிவு வேண்டும்; எந்தப் பொருளையாவது நோக்கு மிடத்தும் அதன் உண்மை களைத் தெரிந்து கொள் ளும் நல்லறிவு; எப்போதும் அச்சமற்ற [illegible]
- பாரதியார்

## இன்று உயிர்த்த ஞாயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

09 - 04 - 1998 அன்று அகாலமரணமடைந்த
எமது நண்பன்

### செல்வன் பசுபதி சிவவாசன்

[(பொறியியல்பீடம், பேராதனை]

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

எமதுயிரினும் இனிய சிவவாசா
நீ இங்கு வாசஞ் செய்த காலம்
போதுமென எண்ணி காலனுனை
அகவை இருபத்துநாலுள் அழைத்தானோ!
பொறியியல் கல்வி கற்ற நீ
விடுமுறையில் வீடு வந்து நண்பரெமைச்
சந்தித்து கலகலப்பாய்க் கதை சொல்லி
அரசடியில் இருந்து புறப்பட்டது
ஆவரங்காலில் இளவயதில் கொடு
விபத்தில் பலியாகவோ நண்பனே!
உனை எண்ணி கதறுகிறோம், பதறுகிறோம்.

நண்பர்கள்
ஒளியருவி வீடியோ விஷன்

[54868]

## குருபூசை தின போட்டிகள்

புலோலி மேற்கு தம்பசெட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் நடத்தும் சதாவதானி குருபூசை தினப் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டிகள் நிலையத் தலைவர் அ. துரைசிங்கம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

## விநோத உடைப் போட்டி

எமது நிலையப் பொன்விழாவை முன்னிட்டு 1998 - 04 - 14 சித்திரைப்புத்தாண்டு தினத்தில் நடைபெறவுள்ள இறுதி நாள் நிகழ்வுகளின் ஓரம்சமாக நெல்லைக் குமரன் றேடர்ஸ் ஆதரவுடன் விநோத உடைப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

சரியாக பிற்பகல் 2-30 மணிக்கு, நெல்லியடி-நாவலர் மடத்தில் ஆரம்பித்து எமது நிலைய முன்றலைச் சென்றடையவுள்ள இவ் விநோத உடை பவனியில் பங்குபற்ற விரும்புவோரை தேவையான ஆயத்தங்களுடன் பிற்பகல் 2-00 மணிக்கு நாவலர் மடத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். வெற்றி பெறுவோருக்குப் பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

நெல்லியடி சன சமூக நிலையத்தினர்

(சி-3429)

## மன்னார்-கொழும்பு சேவைக்கு சொகுசு பஸ்கள்

யாழ்ப்பாணம், ஏப். 12

மன்னார் - கொழும்பு போக்குவரத்து சேவைக்காக வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு இரண்டு புதிய சொகுசு பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன,

மன்னார் - கொழும்புக்கு இரண்டு பஸ்களே இதுவரையும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. இதனால் இச்சேவையைச் சிறப்பாக நிகழ்த்த முடியாத ஒரு நிலை காணப்பட்டது. இதனைப் போக்குவரத்துச் சபைக்குத் தெளிவுபடுத்தியதை அடுத்தே இலங்கை போக்குவரத்துச்சபை இந்த இரண்டு பஸ்களையும் வழங்கியுள்ளது என வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் சொக்கலிங்கம் தெரிவித்தார். (9,ரி)

## நெல்லியடி சனசமூக நிலைய பொன் விழா

### நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபை பாலர் பாடசாலை வெள்ளி விழா

### நிகழ்ச்சிகள்

**1998-04-12 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள்**

★ காலை நிகழ்வு:
யாழ். மாவட்டத்தில் துவிச்சக்கரவண்டி ஏக விநியோகஸ்தர்களும், விற்பனை முன்னோடிகளுமான E. S. பேரம்பலம் சக நிறுவனத்தினரின் ஆதரவுடனான
*30 மைல் சைக்கிளோட்டப் போட்டி*

★ மாலை நிகழ்வு:
நெல்லியடி - லவ்லி கூல்பார் ஆதரவுடனான நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபைப் பாலர் பாடசாலைச் சிறார்களின்
*விளையாட்டு விழா*

பிரதம விருந்தினர்:
திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்
(இணைப்பாளர் G. T. Z. அமைப்பு)

**1998-04-13 திங்கட்கிழமை நிகழ்ச்சிகள்**

★ காலை நிகழ்வு:
வடமராட்சியில் புடைவை வாணிபத்தின் முன்னோடியான நெல்லியடி - செல்லமுத்தூஸ் புடைவை மாளிகையின் ஆதரவுடனான
*10 மைல் மரதனோட்டப் போட்டி*

★ மாலை நிகழ்வு:
நெல்லியடி - இந்திரா கபேயின் ஆதரவுடனான நெல்லியடி சனசமூக நிலைய
*விளையாட்டு விழா*

பிரதம விருந்தினர்: திரு. T. V. கிருஷ்ணசாமி
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்டம்)

**1998 - 04 - 14 செவ்வாய்க்கிழமை நிகழ்ச்சிகள்**

காலை நிகழ்வு:-
நெல்லியடி N. S. R. இன்டஸ்ரியல் ஆதரவுடனான எமது கழக அங்கத்தவர்கள் பங்குபற்றும்
*5 மைல் மரதனோட்டம்*

மாலை நிகழ்வுகள்:-
பி. ப. 3. 00 மணிக்கு; நெல்லியடி மத்திய சந்தை-நெல்லைக்குமரன் றேடர்ஸ் ஆதரவுடன்
*விநோதஉடைப் போட்டி*
பி. ப, 5. மணிக்கு;
*''பரிசளிப்பு விழாவும் கலை விழாவும்''*
பிரதம விருந்தினர்:- பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சிகள்:-

○ *விழா மலர் வெளியீடு*
நெல்லியடி மருதம் இரும்பகத்தின் ஆதரவுடன் பொதுப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம்

பரிசில் பெறுவோர்:-

1997 ஓகஸ்ட் க. பொ. த. (உ/த) பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் உயர்நிலை பெற்ற மாணவர்கள்

கணிதம் — செல்வன் செல்வரட்ணம் உதயசங்கர் (யா/இந்துக் கல்லூரி)
உயிரியல் — செல்வன் செல்லக்குட்டி சிவகணேசன் (யா/சென்: ஜோன்ஸ் கல்லூரி)
வர்த்தகம் — செல்வன் சிறீகாந்தா கஜேந்திரன் (யா/மத்திய கல்லூரி)
கலை — செல்வன் மார்க்கண்டு பிரியவதனன் (யா/மகாஜனாக் கல்லூரி)

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை-1997 இல் யாழ். மாவட்டத்தில் அதிஉயர் புள்ளி பெற்றவர்
செல்வி அபிராமி
(யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்)

**வடமராட்சியில்:-**

க. பொ. த. (உ/த) பரீட்சை 1997 ஓகஸ்ட்டில் உயர்நிலை பெற்றவர்கள்

கணிதம் — செல்வன் அப்புத்துரை ஜெயரஞ்சன் (யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)
உயிரியல் — செல்வன் சிவராஜா சுதர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி)
வர்த்தகம் — செல்வன் குணரட்ணம் சந்திரகுமார் (யா/ஹாட்லிக் கல்லூரி)
கலை — செல்வி சுஜிதா சண்முகசுந்தரம் (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

க. பொ. த. (சா/த) - 1996 டிசம்பர் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றவர்
செல்வி பஞ்சகல்யாணி செல்லத்துரை
(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உயர் புள்ளி பெற்றவர்
செல்வன் இரட்ணராஜா ராகுலன்
(யாழ்/ ஞானசாரியார் கல்லூரி)

எமது பிரதேச மாணவர்கள்:-
1996 க பொ. த.(சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்:

திரு. நா. பாஸ்கரன் அவர்களின் ஆதரவுடன் எமது நிலையத்தால் நடத்தப்பட்ட கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் மற்றும் எமது பிரதேச மாணவர்களிடையே நடத்தப்பட்ட கல்விசார் போட்டிகளில் வெற்றியீட்டியோர் ஆகியோருக்கான

*பரிசளிப்பு*

○ கலைஞர்கள் கௌரவிப்பு:
(இ. செல்வராஜா - ஐடியல் அவர்களின் ஆதரவில்)
கௌரவிப்பவர்: மகாவித்துவான் பிரம்மஸ்ரீ
*மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள்*
கௌரவிக்கப்படுவோர்:
நாதஸ்வர வித்துவான் கேதீஸ்வரன் அவர்கள்
சங்கீத பூஷணம் குமாரசாமி அவர்கள்

○ மாணவரின் கலை நிகழ்ச்சிகள்

○ உதயசங்கர் - கேதீஸ்வரன் குழுவினரின் தவில் - நாதஸ்வர இசை

○ சங்கீத பூஷணம் குமாரசுவாமியின் இன்னிசைக் கச்சேரி

○ பட்டிமன்றம்

○ ''ராகம்ஸ்,' இசைக்குழுவினரின் ''இதயராகம்'' இசை நிகழ்ச்சி

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லியடி சனசமூக நிலையத்தினர்

விளம்பர அன்பளிப்பு:

**R. P.**
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.

(சி/3430)

## UNIVERSITY OF JAFFNA
SHRI LANKA

Applications will be received by me for the post of University Medical officer from suitable candidates, upto **08** th July **1998**.

**SALARY SCALE:**

Rs. 10625 - 10 x 275 - 10 x 340 - 16, 775/-p. m.

**QUALIFICATION:**

Medical Degree of a recognized University with atleast 3 years' experienee as Medical Practitioner.

**AGE LIMIT:**

Not more than 40 years.

**SELECTION:**

By Interview

Application forms and particulars for the above post should be obtained from the office of the Assistant Registrar / Establishments of this University on a payment of Rs. 20 for eacn application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post should send a Money Order/ Poetal Order to the value of Rs. 20 in favour of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs. 2. 50 stamped envelpe of 23x10 c. m- in size. Applications sent on PRESCRIBED FORMS only will be accepted.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their appointing authorities. Age limmit is not applicable who are in service.

Applications received after the closing date and the applications on which the particulars are stated illegibly will be rejected.

Dr. K. Kunarasa
REGISTRAR
University of Jaffna,
Jaffna.
1998. 04. 08

[C/3407]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் பகுதி மக்களை மீளக்குடியமர அனுமதிக்குக

## இடம்பெயர்ந்தோர் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஏப். 12

''கடந்த சுமார் பத்து வருடகாலமாக இடம் பெயர்ந்து பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் மாவிட்டபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களை மாவிட்டபுரத்தில் மீண்டும் சென்று மீளக்குடியேற அனுமதிக்க வேண்டும்.''

இவ்வாறு வட பகுதி இராணுவ கட்டளை அதிகாரியையும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் க. வைரவப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக வலிகாமம் வடக்கு பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராஜா கலந்து கொண்டார். பெரும் எண்ணிக்கையான இடம் பெயர்ந்த மாவிட்டபுரத்து மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

வலி. வடக்கு பிரதேசசபை பொதுவேலைகள் அத்தியட்சகர் ஐ. சிவலோகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.சின்னத்தம்பி, வலி. வடக்கு மற்றும் வலி. தென்மேற்கு பகுதிகளுக்கான வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர் சி. நாகேஸ்வரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இதில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தங்கள் வீடுகளை நேரில் சென்று பார்வையிடவும், மீளக்குடியேறவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களை அனுமதிக்க வேண்டும் என்றும் —

கடித மூலம் இதற்கான அனுமதியைக் கோருவதென்றும் —

இக் கூட்டத்தில் முடிவு செய்யப்படடது. புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. (ஐ-135)

## திரிசாரணர் கூட்டம்

திரிசாரணர்களுடைய கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். (இ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

### முதுதத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1996

கலைப்பீடம்

முதுதத்துவமாணி தகுதி காண் தேர்வுக்கான பின் வரும் பாடங்களில் பட்டப்படிப்பின் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல்,
இந்து நாகரிகம்,
வரலாறு, தமிழ்,
மெய்யியல், சமஸ்கிருதம்,
கிறிஸ்தவ நாகரிகம்,
மொழியியல், நுண்கலை,
வர்த்தகம்,
நாடகமும் அரங்கியலும்,
முகாமைத்துவம்,
அரசறிவியல்,
சமூகவியல்.

விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 25 – 05 – 1998 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10 செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவம் பெற வரும் போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 10 இற்கான காசுக் கட்டளையை அல்லது தபாற் கட்டளையுடன் முத்திரை ஒட்டி சுயவிலாசம் இடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 25 – 05 – 1998 இற்கு முன்பாகக் கலைப்பீடாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இத் திகதிக்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

– பதிவாளர்,

யாழ்ப்பாணப்,
பல்கலைக்கழகம்.
27 – 03 – 1998

(சி–3392)

## சுய தொழில் கடன்

கொழும்புத்துறை, ஏப். 12

கோப்பாய் பிரதேசச் செயலாளர் பிரிவில் அச்செழு கிராமத்தில் 27 விவசாயிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடனாக தலா 8 ஆயிரம் ரூபா கடந்த வெள்ளிக் கிழமை வழங்கப்பட்டது.

அச்செழு கிராம முன்னேற்றச் சங்கத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உபதலைவர் எஸ். அப்புக்குட்டி- நல்லதம்பி தலைமையில், திட்ட உத்தியோகத்தர் வி. தர்மலிங்கத்தின் கண்காணிப்பில் இப்பணம் வழங்கப்பட்டது. (ஐ-30)

## ஆலய சூழலில் சிரமதானம்

வலி தென்மேற்கு, ஏப். 12

நவாலி இளைஞர் வட்டம் களையோடை அம்மன் ஆலய சூழலில் சிரமதான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

நாளை திங்கட்கிழமை குடாநாட்டின்பல்வேறுபகுதிகளில் இருந்தும் பக்தர்கள் பங்குனித்திங்கள் இறுதி நாள் விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ–185)

## மினிபஸ் கட்டணம் குறைப்பு

வடமராட்சி, ஏப். 12

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் மினிபஸ் கட்டணம் இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இது வரை காலமும் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கும் ஒரு வழிக்கட்டணமாக 12 ரூபா அறவிடப்பட்டு வந்தது. தற்போது இக் கட்டணம் இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டு ஒரு வழிக் கட்டணமாக 10 ரூபா அறவிடப்பட்டு வருகிறது. (ஐ-173)

## தரகர் தொல்லை

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ், செயலக வாசற் பகுதியில் தரகர்கள் தொல்லை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஓய்வூதியம், வாகன அனுமதிப்பத்திரம், பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கு செயலகத்துக்கு வருவோரை வாசற் பகுதியில் இடைமறித்து ''விண்ணப்பப்படிவம் நிரப்பித் தருகிறோம்.'' ''கூடியவிரைவில் பிறப்பு, இறப்புப் படிவங்களைப் பெற்றுத் தருகின்றோம்'' எனக்கூறித் தொல்லை கொடுக்கின்றனராம். (இ-7)

## தொழுநோய் பரிசோதனை

சண்டிலிப்பாய், ஏப். 12

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள குட்டியபுலம், சுதந்திர புரம் ஆகிய பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 81 குடும்பங்களுக்கான தொழு நோய் ஆய்வும், தொழு நோய் பரிசோதனையும் அண்மையில் குட்டியற் புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்தப் பட்டன.

யாழ். மாவட்ட தொழு நோய் தடுப்பு சுகாதார பரிசோதகர் தெல்லிப்பழை பொது சுகாதார பரிசோதகர், இப் பிரிவு குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. (இ–35)

## விலக்குப்பிடிக்க சென்றவர் காயம்

நெல்லியடி, ஏப். 12

இரு குழுவினர்களுக்கு இடையில் இடம்பெற்ற கைகலப்பின் போது விலக்குப் பிடிக்கச் சென்றதாகக் கூறப்படும் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் ஆஸ்பத்பரியில் அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 ணியளவில் கரவெட்டி இராச கிராமம் பகுதியில் இடம்பெற்றது.

அதே கிராமத்தைச் சேர்ந்த ஐ. பகீரதன் (32) என்னும் மினிபஸ் நடத்துனரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு மேலதிக சிகிச்சைக்காக [illegible] ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (இ-109-7)

## கட்டடம் அமைக்க நிதி

நல்லூர் ஏப். 12

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்கு புதிய கட்டடம் அமைக்க புனர்வாழ்வு அமைச்சு 50 லட்சம் ரூபா ஒதுக்கி உள்ளது.

## பூட்டிய நிலையில் பிரசவ விடுதி

வலி – வடக்கு, ஏப்.12

அளவெட்டியில் அமைந்துள்ள பிரசவ விடுதி ஐந்து லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட போதிலும் ஊழியர்கள் இன்மையால் பூட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இப் பிரசவவிடுதி இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்தது. ஆனால் இது தற்போது திருத்தப்பட்ட போதிலும் இவ் வைத்திய சாலையில் கடமையாற்ற மருத்துவ மாதுகள், தாதிகள் இன்மையால் இவ் வைத்தியசாலை மூடிய நிலையிலேயே உள்ளது.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப் 12

வண்ணார்பண்ணை கில்னர் ஒழுங்கையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் நாளை பங்குனி இறுதி திங்களன்று அம்பாளுக்கு குளிர்ச்சி உற்சவம் இடம் பெறும். அன்று மு.ப 10.30 மணியளவில் அம்பிகைக்கு விசேஷ குளிர்த்தி அபிஷேகமும், விசேட பூசையும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.30 மணியளவில் அன்னதானமும் நடைபெறும். (ஐ–30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 12

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும், விசேட பூசையும், தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.

இதே வேளை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை புது வருடத்தை முன்னிட்டு விசேட அபிஷேகமும், பூசையும் இடம் பெற்று அன்னதானமும் இடம்பெறும். (ஐ–4)

★ ★ ★

வலிகாமம்,தெற்கு ஏப்.12

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய ரதோற்சவ விழா புத்தாண்டு தினமான செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற உள்ளது. நாளை திங்கட் கிழமை மாலை சப்பறத் திருவிழா நடைபெறும். வெகுதானிய வருடப்பிறப்புச் சங்கிராந்திப்பூசை இரவு 2.51 மணிக்கு ஆலயத்தில் இடம் பெறும்.

புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், அன்று மாலை 2.30 மணிக்கு துவஜாரோகண (கொடியிறக்கம்) நிகழ்வும் இடம் பெறும். (ஐ–152)

சாவகச்சேரி, ஏப். 12

கச்சாய் அருள்மிகு நாவலடிப் பிள்ளையார் தேவஸ்தான விசேட பூசையும் புதுவருட நிகழ்வுகளும் எதிர் வரும் புதுவருடத்தன்று பிற்பகல் ஒருமணி தொடக்கம் வே. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் புதுவருட ஆசியுரையை தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம் பிள்ளையும், வித்தக விநாயகர் ஆலய குரு பரமசாமியும் வழங்கவுள்ளனர்.

''மேன்மை கொள் சைவ நீதி'' என்னும் பொருளில் இளைப்பாறிய அதிபர் ஸ்ரீ இராமச்சந்திர சர்மா கருத்துரை நிகழ்த்துவார். சங்கீத பூஷணம் திருமதி த. செளந்தரவல்லியின் இன்னிசை நிகழ்வும் இடம் பெறும். (ஐ-31)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் ஸகஸ்ரமஹா சங்காபிஷேகம் புத்தாண்டு தினமான செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

மாலையில் விசேட உற்சவத்தை அடுத்து முருகப் பெருமான் வீதிவலம் வருவார். (ஐ-11)

★ ★ ★

அனலைதீவு அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மகாகணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.00 மணிக்கு கொடி இறக்கத்துடன் நிறைவு பெறும்.

மகோற்சவ கிரியைகளை ஊரெழு சிவஸ்ரீ பாலவைத்தியநாத சிவாச்சாரியார் மேற்கொண்டு வருகின்றார். (இ-7)

## வண்ணாத்திப் பாலம்:

## விபத்தில் காயமடைந்த குழந்தை நேற்று மரணம்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில் பங்குனித்திங்கள் உற்சவத்துக்கு பக்தர்கள் சென்ற மினிபஸ் வண்ணாத்திப் பாலப் பகுதியில் தடம் புரண்ட சமபவத்தின்போது காயமடைந்து, ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை நேற்று அங்கு உயிரிழந்தது.

சங்கானையைச் சேர்ந்த சொக்கலிங்கம் நிரோஜன் என்ற ஆண் குழந்தையே மரணமானகுழந்தை ஆவர்

சடலம் மரண விசாரணையை அடுத்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ–139–15)

## விசேட வகுப்புக்கள்

15 – 04 – 98 இல் ஆரம்பம்:

சிங்களம் - ஆங்கிலம்
இலக்கணத்துடன் பேச, எழுத

ஆங்கிலம் - தமிழ்
சுருக்கெழுத்திலும் தட்டச்சிலும்
பயிற்சி பெறுவதற்கு

### சுஷநந்தீஸ்

23, டச் வீதி, சாவகச்சேரி

[ சி/3427 ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தஞ்சம் கோரும் தமிழரை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம்

## நோர்வேயிடம் புளொட் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

இலங்கையில் தொடர்ந்தும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அங்கு மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய சூழ் நிலை ஏற்படவில்லை. எனவே நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழ் மக்களை நோர்வே அரசு இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது.

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் நோர்வே அரசைக்கேட்டுள்ளார்.

அண்மையில் நோர்வேயில் நடைபெற்றமீன்பிடித்துறை, கப்பல்துறை சம்பந்தமான கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக நோர்வே சென்றிருந்த அவர் செய்தி ஊடகங்கள் ஊடாக நோர்வே அரசுக்கு இந்த வேண்டுகோளை விடுத்தார்.

நோர்வேயில் அவர் அகதி முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களையும் நேரில் சென்று சந்தித்து அவர்களின் குறைகளையும் கேட்டு அறிந்து கொண்டார் என்றும்—

புளொட் அமைப்பின் நோர்வே கிளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலும் அவர் கலந்துகொண்டார் என்றும்—

அதில் இலங்கையின் யுத்த நிலை தொடர்பாகவும் அவர்களுக்கு வழங்கவேண்டிய நிவாரணங்கள் தொடர்பாகவும் புனர்வாழ்வு புனர் நிர்மாணப் பணிகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது என்றும் புளொட் அமைப்பின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10-9)

## மாகோவில் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப். 12

பருத்தித்துறை துறைமுகத்தில் தற்போது பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் ''மாகோ'' கப்பல் மூலம் பொருள்களை எடுத்து வந்தவர்களை துறைமுகத்துக்குச் சென்று தமது பொருள்களை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ். செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் செ. மகாலிங்கம்கேட்டுள்ளார். (இ-7)

## விளையாட்டு உபகரணம்

வலி. வடக்கு, ஏப். 12

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 23 விளையாட்டுக்கழகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பன்முகப்படுத்திய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களே விநியோகம் செய்யப்பட்டன.

இதன் கீழ் உதைபந்து, கைப்பந்து மென்பந்து, துடுப்பாட்ட மட்டை என்பன விநியோகம் செய்யப்பட்டன. (ஐ-86)

## புதுவருட கைவிசேஷம்

**வாக்கிய பஞ்சாங்கப் கணிப்பின்படி**

15 - 4 - 1998 புதன்கிழமை காலை 7. 56 முதல் 8.57 வரைக்கும் அல்லது காலை 9.05 முதல் 9.47 வரைக்கும் அல்லது காலை 9.59 முதல் 11.58 வரைக்கும் மறுநாள் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.41 முதல் 11.54 வரைக்கும் அதற்கடுத்த நாள் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.19 முதல் 9.40 வரைக்கும் அல்லது காலை 9.52 முதல் 10.45 வரைக்கும் கைவிசேஷம் பரிமாறலாம்.

**திருக்கணித பஞ்சாங்கக் கணிப்பின்படி**

15 - 4 - 1998 புதன்கிழமை காலை 9.22 முதல் 10.22 வரைக்கும் அல்லது 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.21 முதல் 10.57 வரைக்கும் அல்லது 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.33 முதல் 8. 40 வரைக்கும் கைவிசேஷம் பரிமாறலாம்.

**மகாதேவா ஜோதிட கணிப்பின்படி**

14 - 4 - 1998 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.05 முதல் 12.29 வரைக்கும் அல்லது 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.05 முதல் 10.05 வரைக்கும் அல்லது பிற்பகல் 4.05 முதல் 5.05 வரைக்கும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.05 முதல் 7.05 வரைக்கும் நண்பகல் 1.05 முதல் 1.34 வரைக்கும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.05 முதல் 10.32 வரைக்கும் அல்லது பிற்பகல் 5.05 முதல் 6.05 வரைக்கும் ஆகிய நேரங்களுக்குள் (பழைய நேரம்) கை விசேஷம் பரிமாறலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வருமான பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பம்

தென்மராட்சி. ஏப். 12

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் வருமான மேற்பார்வையாளர்களை வருமான பரிசோதகர்தரம் 2க்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பங்கள் யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமியினால் கோரப்பட்டுள்ளன.

வருமான மேற்பார்வையாளர் பதவியில் நிரந்தர சேவையில் ஐந்து வருடங்கள் பூர்த்தி செய்தவர்கள் இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன் திருகோணமலை வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு முகவரியிட்டு தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனைக்கு விண்ணப்பிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பதவியுயர்வுக்கான விண்ணப்பங்கள் முதன் முறையாக வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளதும், யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பத்துக்கு மேற்பட்ட வருமான பரிசோதகர் பதவிகள் வெற்றிடமாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதி கடலில் பகல் வேளைகளில் கடற்தொழிலில் ஈடுபட விரும்புவோர் மேலதிக விவரங்களைப் பெற குருநகர் சீநோர் கடற்படை முகாமில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து பலாலி படைத்தலைமையகம் நேற்று சனி விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம் சுகவாழ்வு நிலையத்தில் குழந்தைகளின் அபிவிருத்தி, வளர்ச்சி பற்றிய ஒன்றுகூடல் இன்று ஞாயிறு நடைபெறும்.

சுகவாழ்வு நிலையத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கு சுகவாழ்வு நிலையத் தலைவர் கே. ஸ்ரீபதியின் தலைமையில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆதரிப்பதாகவும் —

பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண மத்திய அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும் எனவும் — டாக்டர் ராமதாஸ் கோரி உள்ளார்.

தமிழ் நாட்டிலோ அல்லது வேறு எந்தப் பகுதியிலோ விடுதலைப் புலிகள் இல்லை எனவும் அவர் கூறினார். (இ-9)

### இலங்கை மீனவர்...

[முதலாம் பக்கத் தொடர்]

கள் கடந்த விாழர்க்கிழமை தமிழ்நாட்டின் நாகூகடற்ய கரையைச் சென்றடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த அரசப்பன் செல்வநாதன், சௌந்தரம் கோவிந்தராஜன், ஹென்றி நிமால், றேமன்றிமிச்சியேல் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர். (இ-7)


SALE SALE

இதோ!

மலரும் புத்தாண்டை முன்னிட்டு

**மகாநதி** யின் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

10% முதல் 30% வரையிலான சிறப்புத் தள்ளுபடி

இத்தள்ளுபடி 08 - 04 - 98 முதல் 14 - 04 - 98 வரைக்குமே!

நதிகளின் சங்கமம் கடலில்; சகலவித புடைவைகளின் சங்கமம்

மகாநதியில்

ஆம்

மலரும் புத்தாண்டை முன்னிட்டு இந்தியா, பாங்கொக் ஆகிய நாடுகளில் இருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட சிறியோர் முதல் பெரியோர் வரை இருபாலாருக்குமான ஆடைகளை கண்கவர் வர்ணங்களில் தெரிவு செய்ய

**மகாநதி புடைவை அகம்**

[பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்]

16, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

4, நவீனசந்தை, சாவகச்சேரி.

[சி/3375]



**ஏப்ரல் 12ஆம் திகதி 1998**

**இன்று மறந்து விடாதீர்கள்!**

இவ்வருடத்தின் மிகப்பெரிய இசைவிருந்து

இல. 02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இல. 99, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நதியா நகைமாடம் - நிதியா நகைமாடம்**

ஆதரவில்

ஜோ. எகட்டனின் ''செனித்'' மாக்கட்டிங் அன்ட் அட்வைசிங் சிஸ்டம்ஸ்

பெருமையுடன் வழங்கும்

**சித்திரையில் ஒரு மாலை**

ஆனந்த் இசைக்குழுவினரின் **இசை விருந்தும்**

குருநகர் **ஆ.சங்கரின் பிறேக் நடனமும்**

உங்கள் அபிமான வானொலி அறிவிப்பாளர்கள்

ஜோக்கிம் பெர்னான்டோ ரேலங்கி செல்வராசா

கே. ஜெ. சுரேஸ் ஆனந்த்

நிகழ்ச்சிக்கு பிரதம அதிதி: உயர்திரு. எஸ். நமசிவாயம் (யாழ். வர்த்தக சங்கச் செயலாளர்)

கௌரவ விருந்தினர்: திரு. K. இராசதுரை [அதிபர், யாழ். மத்திய கல்லூரி]

இடம்: யாழ். மத்திய கல்லூரி மண்டபம்

நேரம்; 2-30 மணி (பழைய நேரம்)

டிக்கற்: ரூபா 20/-

(குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே உள்ளதால் மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

நன்றியுடன்

(54840) நதியா - நிதியா நகைமாடம்



எமது வீடியோ CD வெளியீடு!

★ வேட்டைக்காரன்
★ தாய் சொல்லைத் தட்டாதே
★ ரத்தக் கண்ணீர்
★ நாடோடி மன்னன்

இன்றைய புதிய வெளியீடு!

ராஜ்கிரண் - குஷ்பூ நடித்த

பொன்னு விளையிற பூமி

அடுத்த புதிய வெளியீடு!

முரளி- குஷ்பூ - ராதிகா நடித்த

வீரத் தாலாட்டு

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/3434)



உடுப்பிட்டி

**பிரபா**

வெண் திரையில்

(20 அடி)

12 - 4 - 98இல்

முரளி - சூரியா - கவிதா ரஷிகா நடித்த

காதலே நிம்மதி

காட்சி நேரம்:- 10-30, 2-30

(54875)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 12 -04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org